பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | தை 04 | புதன்கிழமை 17.01.2018 | கதிர் 73

## ஆணைக் குழுவின் முழு அறிக்கை இன்று பகிரங்கமாகும்

பிணைமுறி விற்பனை ஊழல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணை அறிக்கை இன்றுநாடாளுமன்றத்திற்குச்சமர்ப் பிக்கப்படும் என ஜனாதிபதி செய லகம் தெரிவித்துள்ளது. இந்த அறிக்கைமுழுமையாகஜனாதிபதி செயலக இணையத் தளத்திலும் இன்று வெளியிடப்படும்.

# சேர்ந்திருந்து கொண்டே எதிராக செயற்படுவோரால்தான் கஷ்டம்

முதல்வர் விசனம்








(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜனவரி 17

தீர்வு விடயத்தில் எங்களுக்கு எதிராகச் செயற்படுப வர்களின் நடவடிக்கைகளை இலகுவில் தடுக்கலாம். ஆனால் எங்களோடு சேர்ந்திருந்து பக்கம் 18 »

## இனி இது ரகசியம் அல்ல!

..ஊழல் பேர்வழிகளுக்கு எதிராக எனது வாளைச் சுழற்றப் போகிறேன் என்று பிரகடனப்படுத்திய ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன, இடை நடுவில் களைத்து, அமைச்சரவைக் கூட்டத்திலிருந்தே வெளிநடப்புச் செய்ய வேண்டிய நிலைக்குத் பக்கம் 03 »

# அமைச்சரவையில் குழப்பம் ஜனாதிபதி வெளியேறினார்

## பின் சிரேஷ்ட அமைச்சர்கள் சமாளித்துக் கூட்டிவந்தனர்



கொழும்பு, ஜனவரி 17

நல்லாட்சி அரசின் பிரதான பங்காளிக் கட்சிகள் இடையே ஏற்பட்டுள்ள பிய்ச்சல் - பிடுங்கல் நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்திலும் உச்சமாக எதிரொலித்தது. சக அமைச்சர்களுடன் முரண்பட்ட அமைச்சரவைத் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன - இடை நடுவில் - ' உங்களுடன் அரசு நடத்த முடியாது' என்று கூறிவிட்டு கூட்டத்தை விட்டு எழுந்து நடையைக் கட்டினார் என அறிய வந்தது. தமது அலுவலக அறையில் போய் அமர்ந்த ஜனாதிபதியை சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் சென்று, நீண்ட நேரம் பேசி, தாஜா பண்ணி, சமாளித்து, சமரசம் செய்து, பின்னர் அமைச்சரவைக் கூட்டத்துக்குக் கூட்டி வந்தனர் எனவும் நம்பகரமாக அறிய வந்தது. பக்கம் 18 »

## 'மிக்' கொள்வனவில் கோட்டா பெற்ற கையூட்டு ஹொங்கொங் வங்கியில்!

அம்பலப்படுத்துகின்றார் அமைச்சர் ராஜித

கொழும்பு,ஜன.17

உக்ரேனிடம் இருந்து மிக்-29 போர் விமானங்களைக் கொள்வனவு செய்த போது, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷவினால் மோசடி செய்யப்பட்டபணம்ஹொங்கொங் வங்கி ஒன்றில் பதுக்கப் பட்டுள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்என்றுசெய்திகள் வெளியாகியுள்ளன.

பேருவளையில்நேற்று பக்கம் 18 »

## கலைப்பீட விரிவுரைகள் மீள நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மூன்றாம் மற்றும் நான்காம் வருட மாணவர்களுக்கு பல்கலைக்கழக வளாகத்தினுள் உள்நுழைவதற்கு விதிக்கப்பட்டபொதுவான தடை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நீக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக நிர்வா பக்கம் 18 »

## ஐ.தே.கவுக்குக் கூட்டமைப்பினர் காவடி தூக்குகின்றார்களாம்!

ஜே.வி.பியின் பிமல் யாழ்.நகரில் கிண்டல்

(எஸ்.நிதர்ஷன்)



மைத்திரி - ரணில் கூட்டு அரசினால் தமிழ் மக்களுக்குத் துரோகமான வகையில் முன்னெடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் நாடாளுமன்றத்தில் கை தூக்குகின்றவர்களாகவும் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் காவடி எடுப்பவர்களாகவுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செயற்பட்டு பக்கம் 18 »

## கடன் பொறிக்குள் இலங்கையை தள்ளிவிட்டிருக்கின்றதாம் சீனா!

சர்வதேச நாணய நிதியம் குற்றச்சாட்டு

ஹொங்கொங்,ஜன.17

சீனாவின் கடன்கள் இலங்கையைக் கடன் பொறிக்குள் தள்ளி விட்டுள்ளன என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் டேவிட் லிப்டன், ஹொங்கொங்கில்நடந்த மாநாடு ஒன்றில் இந்தக் குற்றச்சாட்டைமுன்வைத் பக்கம் 18 »

# மக்களை ஏமாற்றுகின்ற தலைமைகளை மக்கள் இம்முறை ஏமாற்ற வேண்டும்!

இப்படிக் கோருகின்றார் வரதராஜப்பெருமாள்

(எஸ்.நிதர்ஷன்)



"தேர்தல் காலங்களில் தமிழ் மக்களைஏமாற்றிவாக்குகளைப் பெற்று,பின்னர்தமிழ்மக்களுக்கு எதுவுமே செய்யாது தமக்கான சலுகைகளை மட்டும் அரசிடமிருந்து பெற்றுக் கொண்டு தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற தரப்பினர்களை தமிழ் மக்களும் இத் தேர்தலில் ஏமாற்ற வேண்டும்."

– இவ்வாறு வடக்கு, கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர்வரதராஜப்பெருமாள்தெரிவித்துள்ளார்.

தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம்வெளியிடும்நிகழ்வுநேற்று நடைபெற்றபோது அங்கு உரையாற்றுகையிலையே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த காலங்களில் உள்ளூராட்சி சபைகளை ஆட்சி செய்தவர்கள்யார்என்றும்அவர்கள் பக்கம் 03 »

## வரதராஜப் பெருமாள் தரப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீடு




(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு-கிழக்குமாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாளின் தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் தேர்தல் விஞ் ஞாபனம் நேற்று யாழ்ப் பக்கம் 18 »

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்பகுதியுடன் ஒன்றிணைந்து தமிழரசுக் கட்சி செயற்படுகிறது!

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 17

ஆட்சி மாற்றத்தினூடாகதென்பகுதியுடன் ஒன்றிணைந்து தமிழரசுக் கட்சி செயற்படுகின்றது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் வவுனியா வெங்கல செட்டிகுளம் பிரதேச சபை வேட்பாளர் விஜயதாசனின் அலுவலகத்தைத் திறந்து வைத்த போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களில் எமது மக்கள் நிலையான அபிவிருத்தியை நோக்கியும் நியாயமான அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கும் வாக்களிக்க வேண்டும்.

இந்தத் தேர்தலை நாம் முதலில் பிரதேச அபிவிருத்தியைமைப்படுத்தியதாகவே எண்ணியிருந்தோம். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சம்பந்தன் எத்தகைய அரசியல் தீர்வும் நாட்டு மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் அது அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

அவரது விருப்பத்தை நிறைவேற்றும் வகையிலேயே புதிய அரசமைப்பிற்கான வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கை வெளியிடப்பட்டு அதற்கான மக்களின் ஒப்புதலைப் பெறுவதற்காகவே தற்போது உள்ளூராட்சி தேர்தல் என்ற போர்வையில் ஒரு வாக்கெடுப்பு நடத்தப்படுகின்றது.

உள்ளூராட்சிச் சபைகளின் அதிகார எல்லைக் குட்பட்டு அதற்கென குறித்தொதுக்கப்பட்ட வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கான தேர்தலானது நாடு முழுவதிலும் ஒரே நேரத்தில் நடத்தப்படுகின்றது.

இந்தத்தேர்தலின் முக்கியத்துவத்தை மறைப்பதற்காக தென் பகுதி அரசியல் தலைமைகள் தங்களுக்குள்முரண்பாடு இருப்பதுபோன்று நடிக்கின்றன. இங்கு எமது மக்கள் ஒன் றைத்தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். அவர்கள் தங்களுக்குள் கருத்தியல்ரீதியாகமோதிக் கொண்டாலும் எமக்கான தீர்வைப் பொறுத்தவரை அனைவரும் ஒரே சிந்தனையுடனும் முடிவுடனும் தான் இருக்கின்றனர்.

ஆட்சி மாற்றத்தினூடாகஇவர்களுடன்ஒன்றிணைந்து செயற்படும் தமிழரசுக்கட்சியும் அவர்களுடன் ஒத்தி சைந்தே செயற்படுகின்றது.

இந்த ஒத்திசைவானது தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்கு சாதகமான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதாக இருந்தாலும் நாம் வரவேற்கலாம். ஆனால் எமது கைகளைக் கொண்டே எமது கண்களைக் குத்தும் நடவடிக்கைகளுக்கு நாம் எப்படித் துணைபோக முடியும்?

தேர்தல் வாக்குறுதியாக இப்பொழுது உள்ளக சுயநிர்ணயம் சமஷ்டி என்று எதிர்க்கட்சித் தலைவர் திருவாய் மலர்கிறார். ஆனால் ஒருங்கிணைப்புக் குழுவில் நாம் கேள்வி எழுப்புகையில் மழுப்பலான பதில்களையே அவரால் தர முடிந்தது.

வடக்கு - கிழக்கு இணைப்பு சாத்தியமில்லை, பௌத்த மதத்திற்கு முதலிடம் வழங்குவதை நாம் எதிர்க்கவில்லை, சமஷ்டி என்ற பெயரில் அதிகாரம் பகிரப்படும் சாத்தியமில்லை என்று தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் இப்பொழுது உள்ளக சுயநிர்ணயம் குறித்தும் சமஷ்டி குறித்தும்பேசிவருகிறார்.

அங்கத்துவக் கட்சிகளுக்குக் கூடத் தெரிவிக்காமல் தன்னிச்சையாக முடிவெடுத்து தாமே முடிவுகளை எடுத்து தென்னிலங்கை அரசியல் சக்திகளைத் திருப்திப்படுத்திவிட்டு இப்பொழுது உள்ளக சுயநிர்ணயம் குறித்துப் பேசுவதால் என்ன பயன்? அப்படி என்றால் அந்த இடைக்கால அறிக்கையைத் தூக்கி வீசி விட்டோம் என்று பகிரங்கமாகச் சொல்வதற்கு எதிர்க்கட்சித் தலைவர் தயாரா? இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கிய ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்ஆணையகத்தின் தீர்மானங்களை நடைமுறைப் படுத்துவதற்கு 2017 ஆம் ஆண்டு மேலும் இரண்டாண்டு கள்கால அவகாசம் வழங்கியபோது இன்னும் இரண்டு மாதங்களில் இடைக்கால அறிக்கை வரப்போகிறது.

இவ்வளவு காலம் பொறுமையாக இருந்தீர்கள். இன்னும் இரண்டு மாதங்கள் பொறுத்திருங்கள். அந்த இடைக்கால அறிக்கையில் தமிழ் ஈழம் என்ற சொல்லைத் தவிர அனைத்தும் உள்ளடக்கப்பட்டிருக்கும்.



அதனால், எம்முடைய செயற்பாடுகள் அந்த நோக்கத்தை சிதைத்து விடக்கூடாது என்று கூறியே கூட்டமைப்பின் பேச்சாளர் நாடாளுமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்களின் ஆதரவைப்பெற்று கால அவகாசமும் வழங் கியிருந்தார். இதற்கு நாம் உடன்படவில்லை.

கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் இடைக்கால அறிக்கையும் வெளிவந்தது. அது பல சர்ச்சைகளையும் ஏற்படுத்தியிருக்கிறது. இப்பொழுது வந்திருப்பது இடைக்கால அறிக்கைதான் என்றும் இதைப் பற்றிப் பிடித்து மேலும் முன்நோக்கிச் செல்ல வேண்டும் என்று கூறுகின்றார். அரசியலில் உச்சபட்ச கோரிக்கைகளைமுன்வைத்து பேரத்தின்போது சில விட்டுக் கொடுப்புக்களைச் செய்து யாருக்கும் வெற்றியுமில்லை.

தோல்வியுமில்லை என்ற ரீதியில் வெற்றி மக்களுக்கானது என்ற அடிப்படையில் தீர்வு காண்பதே சரியான அணுகுமுறையாகும். பாதிக்கப்பட்ட தரப்பினரான தமிழ்த் தேசிய இனம் இனி வருங்காலத்தில் எத்தகைய துன்புறுத்தலுக்கும் ஆளாகாமல் இருப்பதை உறுதி செய்யக்கூடிய வகையில் கோரிக்கைகளை முன்வைக்காதது மட்டுமன்றி பெரும்பான்மை வாதிகளைத் திருப்தி செய்யக் கூடிய விடயங்களுக்கு இணங்கி அதன் அடிப்படையில் வெளிவந்துள்ளஇடைக்கால அறிக்கையை மேலும் முன்னேற்றப் போகிறோம் என்றால் அது எப்படி சாத்தியம் என்ற கேள்வியை எமது மக்கள் உங்களிடம் வாக்குக் கேட்டு வருகின்ற தமிழரசுக் கட்சியினரைப் பார்த்துக் கேட்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-100)

## விசேட தேவைகளை உடையவர்களும் வாக்களிக்க வசதிகள்

கொழும்பு, ஜன. 17

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் பார்வையை இழந்தவர்களுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் வாக்களிப்பதற்காக வேறு ஒருவரின் ஒத்துழைப்பைப்பெற்றுக்கொள்வதற்கானசட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தேர்தல்ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இவர்களுக்கான உதவியாளர் 18 வயதைப் பூர்த்தி செய்தவராக இருப்பதுடன் அவர் வேட்பாளராக இருக்கக்கூடாது என்றும் தேர்தல் ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது.

அரசியல் கட்சியின் அங்கீகாரம் பெற்ற முகவராகவோ, வாக்குச் சாவடிக்கான பிரதிநிதியாகவோ இருக்கவும் கூடாது.

உதவியாளரின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கு உரிய காரணங்கள் சமர்ப்பிக்கப்படுவது அவசியமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இதற்கானவிண்ணப்பப்படிவங்களைகிராம உத்தியோகத்தர்களிடமிருந்து பெறுக் கொள்ள முடியும். தேர்தல்ஆணைக் குழுவின் உத்தியோகப் பூர்வ இணைத் தளத்திலிருந்தும் இது தொடர்பான விண்ணப்பங்களைப் பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும் என்றும் தெரிவிக் கப்படுகிறது.

## தமிழக மீனவர்கள் 16 பேர் கடற்படையால் கைது

கொழும்பு, ஜன. 17

தமிழகத்தின் ராமேஸ்வரம் மற்றும் மண்டபம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 16 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர் என இந்திய ஊடகமொன்று செய்திவெளியிட்டுள்ளது.

இந்த மீனவர்கள் இலங்கை கடற்பகுதியில்எல்லைதாண்டினர் எனத் தெரிவித்து நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளனர் என அந்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொங்கல் பண்டிகை முடிந்து நேற்று முன்தினம் காலை ராமேஸ்வரத்தில் இருந்து 500 இற்கும் குறைவான படகுகளில் மீனவர்கள் மீன்பிடிப்பதற்காக சென்றுள்ளனர்.

இந்த நிலையில் அவர்கள் நேற்று அதிகாலை கரை திரும்ப இருந்த போது இலங்கைக்கடற்படையினர்மீனவர்களின் 4 விசைப் படகுகளை கைப்பற்றியுள்ளதுடன், 16 மீனவர்களையும் கைது செய்துள்ளனர்.

இதனையடுத்து 16 பேரும் விசாரணைகளுக்காக காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு கொண்டு செல்லப் பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், ஏற்கனவே 159 மீனவர்கள் இலங்கைக்கடற்படையினரால்கைதுசெய்யப்பட்டு இலங்கை சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் ஆசிரியைகளிடம் பணம் பறிக்க முயன்ற நபர்!

வவுனியா, ஜன. 17

வவுனியாவில் கடமையாற்றும் பாடசாலை ஆசிரியர்களிடம் வட மாகாண திட்டமிடல் கிளையில் இருந்து தொடர்புகொள்வதாக கூறி பணம் பறிக்க முயன்ற சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வவுனியா பிரபல பாடசாலைக்கு கடந்த வெள்ளிக்கிழமை தொலைபேசியில் அழைப்பை எடுத்த நபரொருவர் தான் வட மாகாண திட்டமிடல் கிளையில் பணியாற்றும் என். எஸ். கிரிசாந்தன் எனவும் தங்களது பாடசாலையில் கடமையாற்றும் கணவனை இழந்த ஆசிரியைகளின் விவரங்களையும் கோரியுள்ளார்.

பாடசாலை பிரதி அதிபரும் தமது பாடசாலையில் கற்பிக்கும் கணவனை இழந்த ஆசிரியைகள் இருவரின் தொலைபேசி இலக்கத்தையும் அவர்களின் சேவைக்காலம் மற்றும் பெயரையும் வழங்கியுள்ளார்.

இந்த நிலையில், அந்த நபர் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு அழைப்பையேற்படுத்தி வட மாகாணத் திட்டமிடல் கிளையினால் 7 இலட்சம் ரூபா தங்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் அதனைப் பெறுவதற்கு சனிக்கிழமை 10 மணிக்கு 56 ஆயிரம் ரூபா பணத்துடன் மாகாண அலுவலகத்திற்கு வருமாறும் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த ஆசிரியர்கள் சுதாகரித்து பாடசாலை அதிபருடன் தொடர்புகொண்டு கேட்டபோது அவ்வாறு ஒரு நடைமுறை இருக்குமானால் வட மாகாண சபை எழுத்து மூலம் அறிவிக்கும் எனவும் பணத்தைக் கொண்டு செல்வேண்டாம் எனவும் அதிபர்தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் நேற்று முன்தினம் மாகாண திட்டமிடல் கிளைக்கு தொடர்பை ஏற்படுத்திய அதிபர் இந்தச் சம்பவம் தொடர்பாக தெரிவித்த போது அவ்வாறான நபரொருவர்தமது திணைக்களத்தில் இல்லை எனவும் போலியான தகவல் எனவும் கூறியுள்ளனர்.

எனவே இவ்விடயம் தொடர்பாக பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்றும் இந்தப் பாடசாலை ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தள்ளப்பட்டு விட்டார்.

பங்காளிக் கட்சிகளுடன் நல்லாட்சி அரசில் இருந்து கொண்டு தான் அமைச்சரவைக் கூட்டத்திலிருந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளிநடப்புச் செய்தி ருக்கின்றார்.

ஆனால், முன்னர் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த சமயம் சுமார் இரண்டே கால் வருடங்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐ.தே.கட்சி அரசு ஆட்சியிலிருந்தது.

சந்திரிகாவின் சு.க.அரசில் இருந்து விட்டு, கடைசி நேரத்தில் அவரது அரசைக் கவிழ்த்து விட்டு, ஐ.தே. கட்சி பக்கம் தாவி, அக் கட்சியின் அரசு உருவாகக்கார ணமாக இருந்த பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், எஸ்.பி. திஸ நாயக்கா போன்றோரெல்லாம் அந்த ஐ.தே.கட்சியின் அமைச் சரவையில் இடம்பெற்றிருந்தனர்.

இப்படி தம்முடன் நேரடியாக அரசியலில் மோதுண்ட அரசியல் எதிரிகள் பலர் அடங்கிய அமைச்சரவைக் கூட்டத்துக்குத் தனது கட்சிக்காரர்கள் எவரு மின்றியே தனித்துச் சென்று தலைமை தாங்கினார் சந்திரிகா குமாரதுங்க. ஒவ்வொரு அமைச்சரவைக் கூட்டமும் அவருக்குப் போர்க்களம்தான்.

ஆட்சியிலிருந்த ரணிலின் அரசின் அமைச்சர்கள் எல்லோரும் ஒவ்வொரு அமைச்சரவைக் கூட்டமும் உத்தியோகபூர்வமாக ஜனாதிபதி சந்திரிகா முன்னிலையில் கூடுவதற்கு முன்னர், தமது கட்சி அலுவலகத்திலோ அல்லது பிரதமர் ரணிலின் அலரிமாளிகையிலோ கூடி, அன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் என்னென்ன விடயங்களை எப்படி, எப்படிக் கையாள்வது, என்னென்ன தீர்மானங்களை எப்படி, எப்படி எடுப்பது என்றெல்லாம் முடிவெடுத்து விட்டுத்தான் வருவார்கள். இத்தகைய முன்னாயத்தக் கூட்டங்களில் ஐ.தே.கவினர் என்ன வியூகத்தை வகுத்துக் கொண்டு வந்தாலும், அவற்றை எல்லாம் தனி ஓர் ஆளாக நின்று எதிர்த்து, மோதித்தள்ளி, ஐ.தே.கட்சி அரசின் அமைச் சரவையைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார் சந்திரிகா.

ஐ.தே.கவினர் அமைச்சரவைக் கூட்டத்தில் கொடுத்த எந்தத் தொல்லைக்கும் அடங்கி விடாமல், எகிறியபடியே காரியங்களைக் கையாண்டார் சந்திரிகா என்று அரசியல் அவதானிகள் அப்போது பேசுவதுண்டு.

அமைச்சரவைக் கூட்டத்துக்கு வரும்போது தாம் கையில் எடுத்து வந்து, மேசையில் தூக்கி வைக்கின்ற கைப்பையில் அவர் இரகசியமாகப் படம் எடுக்கும் வீடியோ கமராவைப் பொருத்தி வந்தார், ஒலிப்பதிவு நாடாவை வைத்திருந்தார், அமைச் சரவைக் கூட்ட நிகழ்வுகளை முறையற்ற விதத்தில் பதிவு செய்தார் என்றெல்லாம் கூட அப்போது எதிர்த் தரப்பினால் குற்றம் சுமத்தப்பட்டு பரபரப்பாக செய்திகள் வெளியிடப்பட்டன.

ஆனால் சந்திரிகா கிறங்கவே இல்லை.

இந்தநிலைமை, தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஐ.தே. கட்சியின் மூன்று முக்கிய அமைச்சர்களை தன் னிஷ்டப்படி அவர் வீட்டுக்கு அனுப்பிவிட்டுத் தனது சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த லக்ஷ்மன் கதிர்காமர் உட்படமூவரை அந்தப் பதவிகளுக்கு அமைச்சர்களாக அவர் நியமிக்கும் வரையிலும் –

சில மாதங்கள் கழித்து எதேச்சாதிகாரமாக ரணிலின் அரசைக் கலைத்து வீட்டுக்கு அனுப்பி விட்டு புதிய தேர்தலுக்கு அவர் உத்தரவிடும் வரையிலும் தொடர்ந்தது.

2001 டிசெம்பர் – 2004 ஏப்ரல் வரையான காலப் பகுதியில் அரங்கேறிய சம்பவங்கள் இவை.

1995 இல் ஐ.தே.கட்சியின் டி.பி.விஜேதுங்க ஜனாதிபதியாக இருந்த போதும் புதிதாகப் பதவியேற்ற பிரதமர் சந்திரிகா தலைமையிலான சு.க.அரசுடன் சுமார் ஆறு மாத காலம் அமைச்சரவைக்குத் தலைமை வகித்து காலத்தை ஓட்ட வேண்டிய நிலைமை டிங்கிரி பண்டா விஜே துங்கவுக்கு ஏற்பட்டது. ஆனால், சு.க. தரப்போடு முட்டி, மோதி, களேபரம் பண்ணாமல், பிரதமர் சந்திரிகாவின் அமைச்சர்களின் போக்கில் விட்டுப் பிடித்து நிலைமையைச் சமாளித்தார் விஜே துங்க.

முரண்பட்ட தரப்புகளின் அரசுகள் இருந்த போது அமைச்சரவைக்குத் தலைமை வகித்த ஜனாதிபதி விஜேதுங்க அடங்கிப் போனார். ஜனாதிபதி சந்திரிகா எகிறி நின்று அடக்கி ஆண்டார்.

ஜனாதிபதிகள் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, பிரேமதாஸா, மஹிந்த ராஜபக்ஷ போன்றோர் பதவியில் இருந்த போது அவர்களது கட்சியே அரசு அமைத்திருந்ததால் தாம் நினைத்ததை அவர்களால் செய்ய முடிந்தது.

ஆனால் இவர்கள் எல்லோரிலும் வேறுபட்டு, எதிர்த் தரப்பு அரசியல்வாதிகளை பங்காளிகளாகச் சேர்த்துக் கொண்டு நல்லாட்சி அரசை அமைத்த மைத்திரிபால சிறிசேன, அவர்களோடு மாரடிக்க முடியாமல் களைத்துப் போய்விட்டார் என்பதுதான் உண்மை.

முதல்வர் விக்கி நேற்று குறிப் பிட்டமை போல எதிர்த் தரப்பில் முரண்டுபிடிப்போரைச் சமாளிக்கலாம்; கையாளலாம். சேர்ந்திருந்து கொண்டு எதிர்ப்போரைச் சமாளிப்பது கஷ்டம்தான்...!

- மின்னல் -

## மக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ன செய்தார்கள் என்றும் அனைவருக்கும் தெரியும். அந்த ஆட்சியில் ஊழல், மோசடிகள் மற்றும் உட்கட்சி குத்து வெட்டுக்கள் நிறைந்திருந்தன. மக்களுக்குச் செய்யவேண்டிய பலவற்றைச் செய்யாது நிதியும் கூடத் திரும்பிச் சென்றிருந்தது.

இவ்வாறானதொரு நிலையில்தான் மக்களின் அடிப்படை நலன்களுக்கு சேவையாற்ற – ஊழல், மோசடிகள் இல்லாத உள்ளூராட்சி சபைகளை உருவாக்க – ஊர்மனைகள் நோக்கி பொருளாதார முன்னேற்றங்கள் பரவ – இயற்கை வளங்கள் பாதுகாக்கப்பட – எமது தேசமெங்கும் சுத்தமும் சுகாதாரமும் பசுமையும் நிலவ – நாம் இத்தேர்தலில் போட்டியிடுகின்றோம்.

தற்போது வெளியாகியிருக்கின்ற இடைக்கால அறிக்கைக்கு இத்தேர்தலில் மக்கள் ஆணை வழங்க வேண்டுமென்று ஒரு தரப்பினரும் இந்த இடைக்கால அறிக்கை ஏற்றுக் கொள்ள முடியாதது, அதனை நிராகரிக்க வேண்டுமென்று மற்றத் தரப்பினரும் மக்களிடம் ஆணை கேட்கின்றனர்.

நாட்டின் பிரதான இரண்டு கட்சிகளும் இணைந்து கொண்டு வருகின்ற அரசியல் தீர்வு எப்படியானதாக இருக்குமென அறிக்கை வெளியிடப்படவில்லை. தற்போது வெளி வந்திருக்கின்ற அறிக்கை ஒரு பத்திரிகைத் தொகுப்பாகவே காணப்படுகின்றது. அதனைத் தீர்வு என்று கூறுவது தவறு. இதில் காத்திரமான எந்த முன்னேற்றமும் இல்லை.

2016 இல் தீர்வு என்றார்கள். 2016 ஆம் ஆண்டு முடிய, 2017 இல் தீர்வு என்றார்கள். இப்போது 2017 ஆம் ஆண்டும் முடிவடைந்து, 2018 ஆம் ஆண்டும் பிறந்துள்ளது. புதிய ஆட்சி அமைக்கப்பட்டு மூன்று வருடங்கள் நிறைவடைந்துள்ளன.

இன்னும் இரண்டு வருடங்களே ஜனாதிபதியின் பதவிக் காலம் என்பதால் இன்னும் சில மாதங்களுக்குள் அரசியற் தீர்வு குறித்தான பிரேரணை நாடாளு மன்றத்தில் நிறைவேற்றப்படாது விட்டால் தீர்வு வருமென்பதே சந்தேகம்தான்.

தற்போது நடைபெறுகின்ற தேர்தல் முடிவுகள் இந்தக் கூட்டாட்சியையே இல்லாமல் செய்துவிடும் என் நிலைமையும் உள்ளது.

இவ்வாறான நிலைமை இருக்கின்ற போது, இத் தேர்தலில் தமக்கு மக்கள் ஆணை வழங்க வேண்டுமென்று அவர்கள் கோருவது போலித்தனமானது. அத்தோடு தமிழ் மக்களை அவர்கள் மிரட்டுகின்றமையும் மிகவும் ஆபத்தானது. கடந்த காலங்களில் மக்களை ஏமாற்றி, அடுத்தடுத்த தேர்தல்களில் மக்களது ஆணையைப் பெற்றவர்கள் மக்களுக்குப் பூனையைக் கூட காட்டவில்லை.

மாகாண முதலமைச்சரைக் கொண்டு வந்த தரப்பினரே அவரை எதுவும் செய்ய விடவில்லை. ஆகவே மக்களை ஏமாற்றுகின்ற தரப்பினரை இத்தேர்தலில் மக்களும் ஏமாற்ற வேண்டுமென்று கோருகின்றோம்.

உரிமைக்காக போராட்டத்தை ஆரம்பித்த தமிழினம் தொடர்ந்தும் அதிகாரப் பகிர்விற்காக போராட வேண்டும். அதனைச் செய்வதை விடுத்து அரசிற்கு பின்னுக்குத் திரியத் தேவையில்லை. அரசாங்கம் செய்யவில்லை என்றால் அதற்கு எதிர்ப்பைக் காட்ட வேண்டும். தொடர்ந்து போராட வேண்டும்.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற போது அங்கிருந்து வெளியேறி எதிர்ப்பைக் காட்ட வேண்டும். ஆனால் அவ்வாறு எதுவுமே நடக்கவுமில்லை. மக்களுக்கு எதனையும் பெற்றுக் கொடுக்காதவர்கள் தமக்கு அற்ப சலுகைகள் முதல் அனைத்துச் சலுகைகளையும் பெற்றுக் கொள்கின்றனர்.

ஆகவேதான் பேயை மாற்றி பிசாசைக் கொண்டுவராது, மக்களுக்கு அர்ப்பணிப்புடனான சேவையை செய்யக் கூடியவர்களைத் தெரிவு செய்ய வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பிற்குள் முரண்பாடுகள் ஏற்பட்டு வடக்கு முதலமைச்சர் தலை மையில் சுரேஷ் பிறேமச்சந்திரன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் இணைந்து மாற்று அணி யொன்றை உருவாக்குகின்ற நிலைமைகள் முன்னர் இருந்தன.

இவ்வாறு மாற்று அணியொன்று தமக்கு எதிராக வந்து விடுமோ என்ற அச்சத்தில் ஆடிப்போயிருந்த கூட்டமைப்பினர் அந்த நடுக்கத்தைச் சமாளிப்பதற்காக தாமாகவே எம்மிடம் வந்து பேசியிருந்தனர்.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், மாவைசேனாதிராசா மற்றும் சிறிகாந்தா ஆகியோர் தாங்கள் எம்முடன் இணைந்து செயற்பட விருப்பம் தெரிவித்து எம்முடன் பேச்சு நடத்தியிருந்தனர்.

ஒற்றுமை என்பது பிரதானம் என்ற அடிப்படையில் நாமும் அதனை மறுதலிக்கவில்லை. அத்தோடு அந்த ஒற்றுமை கௌரவமானதாகவும் சமத்துவமானதாகவும் இருக்க வேண்டுமென்று நாம் வலியுறுத்தியிருந்தோம்.

ஆயினும் பின்னர் முதலமைச்சர் தலைமையிலான அந்தக் கூட்டு உடைந்து சுரேஷ் பிறேமச்சந்திரனும் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் தனித் தனியாக பிரிந்து, தனித் தனிக் கட்சியாகச் சென்ற நிலையில் முதலமைச்சரும் அதிலிருந்து ஒதுங்கிக் கொண்டார்.

இவ்வாறான நிலையில் அதற்குப் பின்னர் எம்முடன் எந்த வித தொடர்பையும் கூட்டமைப்பினர் ஏற்படுத்தவில்லை. ஆகையினால்தான் அவர்கள் தமது நடுக்கத்தைக் குறைக்கத் தமக்காகவே எம்மிடம் வந்தமையை உணர்ந்து கொண்ட நாம் அவர்களுடன் இணைவதிலிருந்து ஒதுங்கிக்கொண்டோம். – என மேலும் தெரிவித்தார்.

டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி
அனைத்து வகையான வாகனங்கள், மோட்டார் சைக்கிள் மற்றும் உடைந்த பிளாஸ்ரிக் பொருள்கள் 1, 2, 3 வருட கால உத்தரவாதத் துடன் சிறந்த முறையில் ஒட்டித் தரப்படும்
108, பலாலி வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 8680 077 592 5088

# மரண அறிவித்தல்

## கலாநிதி விஜயரத்தினம் ஜோன் மனோகரன் கெனடி

(எதியோப்பிய பல்கலைக்கழக ஆங்கிலப் பேராசிரியர் மற்றும் கிழக்கு, தென்கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் ஆங்கில விரிவுரையாளர்)



யாழ்ப்பாணம், காரைநகர் தீவிப்பந்தனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜோன் மனோகரன் கெனடி 10.01.2018 புதன்கிழமை எதியோப்பியாவில் இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஜயரத்தினம் (ஆசிரியர்) – சிவயோகம் (அதிபர்) தம்பதிகளின் அன்பு மகனும், தம்பாதீவைச்சேர்ந்த காலஞ்சென்ற மரியசந்தானம் (பிராந்திய முகாமையாளர் காப்புறுதி கூட்டுத்தாபனம்) மற்றும் பூமணி (ஆசிரியர்) தம்பதிகளின் அன்பு மருமகனும், கலாநிதி நதிராவின் (கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்) அன்புக் கணவரும், கலாநிதி திருமதி எஸ் மங்கை யோகராஜ்நிஸர் (ஆங்கில சிரேஷ்ட விரிவுரையாளர் – யாழ்.பல்கலைக் கழகம்), பிரேமதாஸ் குமாரசிறி (ஆங்கில ஆசிரியர் – யாழ்.வைவிர்பைய் மகளிர் கல்லூரி), காலஞ்சென்ற ரஜீந்திரகுமாரசிறி மற்றும் திருமதி விமலேசுவரி ஸ்ரானினா (ஆசிரியர்), காலஞ்சென்ற விஜயராஜசேகரன்குமாரசிறி மற்றும் அருள்முகன் சாயிபாபா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், யோகரத்தினம் (பொறியியலாளர்), யோகேஸ்வரி, சாந்தி (பிரான்ஸ்), கோபிச்சந்திரன் (ஆசிரியர்), கவிஸ்ரா (ஜேர்மனி), மணிமலர் – குணசுந்தரம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரஜனிகா – ரமேஷ் குமார், சாயிசந்திரன், லக்ஷ்மன் ஆகியோரின் மாமனாரும், தோபல் ரட்ணசிறி, ஜீவ்சனி, விஜயதர்சினி, விஜய யானா, சாந்திகா, கரோலினா, ஸ்ரானினா, தாரகா, கெவின் ஆகியோரின் சிறிய தந்தையும், அபிஷேக்கின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.01.2018 வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் தீவிப்பந்தனையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தீவிப்பந்தனை, காரைநகர். தகவல் : குடும்பத்தினர்

077 611 2664, 077 946 9547, 075 837 3921

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## அடுத்த தையிலாவது தீர்வு

*"நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்து மூன்று ஆண்டுகள் கடந்தும் தமிழ் மக்களின் நீண்ட காலப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கவில்லை. அடுத்த தைப்பொங்கலுக்குள் எமக்கான நிரந்தர அரசியல் தீர்வு கிட்ட வேண்டும் என ஜனாதிபதியையும், பிரதமரையும் வலியுறுத்துகின்றேன்."*

- இவ்வாறு நேற்றுமுன்தினம் கொழும்பில் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகையில் நடைபெற்ற தேசிய பொங்கல் விழாவில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போது எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் குறிப்பிட்டிருக்கின்றார்.

2015 ஒகஸ்ட் பொதுத் தேர்தல் வேளையில், 2016 இல் தீர்வு என்றார் சம்பந்தர்.

அது பிழைத்த போது, 2017 இல் தீர்வு வரும் என்று எதிர் பார்த்தார்.

அதுவும் பொய்த்துப் போய் விட்டது. 2017 இலும் தீர்வு இல்லை. இப்போது 2018 தை பிறந்து விட்டது. இனி அடுத்த தைக்கு - 2019 ஜனவரிக்கு - முன்னர் தீர்வைத் தாருங்கள் என்று ஜனாதிபதியையும், பிரதமரையும் பார்த்துக் கோரும் நிலையில் சம்பந்தன் - தமிழ் தரப்பினர் - இருக்கின்றனர்.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வையும் உள்ளடக்கியதான புதிய அரசமைப்பை உருவாக்குதல் உட்பட பல்வேறு கருமங்களுக்கான இணக்கத்துடனேயே 2015 முற்பகுதியில் நல்லாட்சி அரசு உருவாக்கப்பட்டது.

ஆனால், பிரதான பங்காளிக் கட்சிகள் இடையேயான முரண்பாடுகள் முற்றி, இன்று நல்லாட்சி அரசே தப்பிப் பிழைக்குமா என்ற சந்தேகம் வந்துள்ள சூழ்நிலையில், புதிய அரசமைப்பு முயற்சி குறித்து சிந்திப்பார் எவருமில்லை என்பதுதான் யதார்த்த நிலைமை.

ஆனால், தற்போதைய ஜனாதிபதியின் பதவிக் காலம் அடுத்த வருட இறுதியுடன் முடிவடைகின்றது - அவரது பதவிக் காலம் இன்னும் 23 மாதங்கள் மட்டுமே - என்பதை உறுதிப்படுத்தும் வகையில் அரசமைப்புக்கு உயர்நீதிமன்றம் வழங்கியிருக்கும் வியாக்கியானம் தமிழர் தரப்புக்கான தீர்வு முயற்சிகள் குறித்து சிறிது நம்பிக்கையைத் தந்திருக்கின்றது என்பதே உண்மை.

அந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான், அடுத்த தைப் பொங்கலுக்கு முன்னராவது நிரந்தரத் தீர்வு வந்தாக வேண்டும் என்ற கோரிக்கையை ஜனாதிபதி மற்றும் பிரதமர் முன்னிலையில் தமிழர் தரப்பின் தலைவர் - எதிர்க்கட்சித் தலைவர் - இரா.சம்பந்தன் முன்வைத்திருக்கின்றார் என்று கருதலாம்.

தற்போதைய ஜனாதிபதிக்கு எஞ்சியிருக்கும் பதவிக்காலம் ஆக 23 மாதங்கள் என்பதால் அதற்கு இடையில் ஒரே சமயத்தில் தமது நல்லாட்சி அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடனும் முரண்பட்டுக் கொண்டு -

மறுபுறத்தில், தான் தலைமை வகிக்கும் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் என்று கூறியபடி, அதன் மூலம் எம்.பிப் பதவிகளைத் தக்க வைத்துக் கொண்டு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற மாற்றுக் கட்சியையும் ஸ்தாபித்து, வளர்த்து, பலப்படுத்தி, அதனை உறுதிப்படுத்தியவாறு கில்லாடி அரசியல் செய்யும் மஹிந்த ராஜபக்ஷவையும் எதிர்த்துக் கொண்டு -

அடுத்த ஜனாதிபதித் தேர்தலை மைத்திரி எதிர்கொள்வதோ, அதில் வெல்வதோ சாத்தியமற்றது என்றே கருதப்படுகின்றது.

தன்னுடைய அடுத்த பதவிக் காலத்தை அவர் உறுதிப்படுத்த வேண்டுமானால், இதில் ஏதேனும் ஒரு தரப்புடன் இணங்கி, சமரசம் செய்து, உடன்பட்டுப் போவது அவருக்குத் தவிர்க்க முடியாதது.

சுதந்திரக் கட்சிக்குள்ளேயே தனக்கு எதிராக வீறுகொண்டெழுந்து, அரசியல் பழி தீர்க்கும் வெறியில் நிற்கும் மஹிந்த ராஜபக்ஷவுடன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இணங்கிப் போவதோ, உடன்பட்டுச் செயற்படுவதோ சாத்தியமற்றவை என்கின்றன கொழும்பு அரசியல் வட்டாரங்கள்.

அதுதான் நிலைமை என்றால், ஜனாதிபதி மைத்திரி - பிரதமர் ரணில் ஆகிய இருவரும் தமக்கு இடையேயான வேறுபாடுகளைக் களைந்து சேர்ந்து செயற்படுவது தவிர்க்க முடியாததாகும்.

அத்தகைய இணக்கமும், உடன்பாடும் மேலும் இறுகுமானால், அந்த இணக்கத்தின் ஏதோ ஒரு பகுதியாக இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நடவடிக்கைகளும் முன்நகரும், புதிய அரசமைப்பு உருவாக்க நடவடிக்கைகளிலும் முன்னேற்றம் ஏற்படும் என்றெல்லாம் நாம் நம்ப முடியும்.

இதுவரை தமது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை வைத்துக் கொண்டு ஏதோ பல விடயங்களைச் சாதிக்கப் போகின்றவர் போல அதிகப் பிரசிங்கித்தனம் பண்ணி, நல்லாட்சி அரசுக்கான இணக்க நிலைமையையும் பங்கப்படுத்திக் கொண்டிருந்த மைத்திரிபால சிறிசேனவுக்கு, உயர்நீதிமன்றத்தின் முடிவு அவரது எதிர்பார்ப்புக்கு - நம்பிக்கைக்கு மாறாக - ஆப்பாக - வந்திருப்பது நல்ல பாடமாக இருக்கும் எனக் கருதலாம்.

இந்தப் பாடம் அமைதித் தீர்வுக்கான காரியங்களை விரைந்து முன்னெடுக்க அவரை நெட்டித் தள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கலாமா?.

# ஐ.தே.கட்சியின் மூலம் மட்டுமே நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும்

## வவுனியாவில் அமைச்சர் ரங்கே பண்டார



வவுனியா, ஜன. 17

ஐக்கிய தேசியக் கட்சியின் மூலம் மட்டுமே இந்த நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும்.

மொட்டில் மஹிந்த ராஜபக்ஷவை பாதுகாக்க வாக்குக் கேட்கிறார்கள். வெற்றிலை, கை என்பவற்றில் தமது கட்சியை பலப்படுத்த வாக்குக் கேட்கிறார்கள். நாங்கள் எங்களைப் பாதுகாக்க வாக்குக் கேட்கவில்லை.

ஆகவே, தனிநபர்களை பாதுகாக்கவும், கட்சிகளை பாதுகாக்கவும் உங்களிடம் வாக்கு கேட்கிறார்கள். ஆனால், நாங்கள் உங்களைப் பாதுகாக்க, இந்த நாட்டைப் பாதுகாக்க வாக்கு கேட்கின்றோம் என நீர்ப்பாசன அமைச்சர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்தார்.

வவுனியா நகரசபைக்காகப் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து நேற்று தாண்டிக் குளத்தில் இடம்பெற்ற பிரசார கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வவுனியா மாவட்டம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டம். இந்த மக்கள் முன்னர் உயிரா பத்துக்களை எதிர் கொண்டிருந்தார்கள். கப்பம் செலுத்தியிருந்தார்கள். போரால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். யுத்தம் முடிந்த பின்பும் இன்னும் முழுமையாக அபிவிருத்தி ஏற்படவில்லை. வீட்டுத்திட்டம், வீதி, நீர்ப்பாசனம், குளக்கட்டுமானம் எனப் பல திட்டங்களை இன்னும் முன்னெடுக்க வேண்டியுள்ளது.

இவற்றில் வளர்ச்சி ஏற்பட்டால் மட்டுமே இந்த மக்கள் அபிவிருத்தி அடைய முடியும். வவுனியாவும் இலங்கை அரசாங்கத்தின் ஒரு பகுதியே. ஏனைய பகுதிகளைப் போன்று நாம் இங்கும் அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது.

பஸ்நிலைய பிரச்சினை தீர்ந்த போதும் அந்த வர்த்தகர்களுக்கு ஓர் இடம்கொடுக்கப்படவில்லை. இன்னும் பல பிரச்சினைகள் இங்கு உள்ளன. அவற்றை நகர சபை ஊடாகவே மேற்கொள்ள முடியும். மத்திய அரசாங்கமாக யார் இருக்கிறார்களோ அவர்களது கட்சி நகரசபைக்கு வருவதன் மூலமே அபிவிருத்தியை சிறப்பாக முன்னெடுக்க முடியும்.

நகரசபை மற்றும் பிரதேச சபை என்பன எங்களிடம் இல்லாவிட்டால் நாம் அவர்களுக்கான தேவைகளை முழுமையாக செய்து கொடுக்க முடியாது. மத்திய அரசாங்கமாக நாங்கள் வடக்கு, கிழக்கில் பல வேலைத் திட்டங்களைசெய்துவருகின்றோம்.

இலங்கை சுதந்திரம் பெற்று 70 வருடங்கள் ஆகின்றன. ஆனால், ஜனாதிபதி, பிரதமர் எனப் பலர் வந்தனர். அவர்கள் இந்த நாட்டின் தாய்மார், பிள்ளைகள் பற்றி கவனம் செலுத்தவில்லை. அவர்கள் நன்றாக இருக்க வேண்டும் என எங்கள் அரசுதான்கவனம்செலுத்துகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரிந்து இருக்கிறது. சுதந்திரக் கட்சி இரண்டு மூன்றாக பிரிந்து இருக்கிறது. எங்களது அரசாங்கத்தில் சுதந்திரக் கட்சிக்காரரும் இருக்கிறார்கள். அமைச்சர்களாகவும் இருக்கிறார்கள்.

ஆனால், நாட்டின் அபிவிருத்திக்கான வேலைகளைச்செய்வது ஐக்கிய தேசியக் கட்சியே. எமது உறவுகள் வெளிநாடுகளில் சென்றுநன்றாக சம்பாதித்து வசதியாக இருக்கிறார்கள்.

அவர்கள் இங்கு வந்து இந்த மக்களுடன் வேலை செய்வதற்காக சந்தர்ப்பங்களை செய்து கொடுக்க வேண்டும். அவர்களையும் அபிவிருத்தியில் இணைக்க வேண்டும். அதைச் செய்யக் கூடியது ஐக்கிய தேசியக் கட்சியே.

ஐக்கிய தேசியக் கட்சியின் மூலம் மட்டுமே இந்த நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும். மொட்டில் மஹிந்த ராஜபக்ஷவை பாதுகாக்க வாக்குக் கேட்கிறார்கள். வெற்றிலை, கை என்பவற்றில் தமது கட்சியை பலப்படுத்த வாக்குக் கேட்கிறார்கள்.

நாங்கள் எங்களைப் பாதுகாக்க வாக்குக் கேட்கவில்லை. ஆகவே, தனிநபர்களை பாதுகாக்கவும், கட்சிகளை பாதுகாக்கவும் உங்களிடம் வாக்கு கேட்கிறார்கள். ஆனால், நாங்கள் உங்களைப் பாதுகாக்க, இந்த நாட்டைப் பாதுகாக்க வாக்குக் கேட்கின்றோம். எனவே, நீங்கள் யானைக்கு நேரே புள்ளடி போட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில், இந்து சமய மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# முல்லைத்தீவு கைவேலியில் நேற்று கேணல் கிட்டுவின் நினைவு நிகழ்வு!



முல்லைத்தீவு, ஜன. 17

கேணல் கிட்டு உள்ளிட்ட பத்து மாவீரர்களின் 25 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு ஜனநாயக போராளிகள் கட்சியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

வங்கக் கடலில் வீரகாவியமான கேணல் கிட்டு உள்ளிட்ட பத்து மாவீரர்களின் 25 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு புதுக்குடியிருப்பு கைவேலிப் பகுதியில் அமைந்துள்ள ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைமை அலுவலகத்தில் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் மகளிர் பிரிவைச் சேர்ந்த ராதா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் கிட்டு உள்ளிட்ட பத்து மாவீரர்களின் திருவுரு வப் படங்களுக்கு சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினார்கள் இதில் நினைவுரைகளை ஜனநாயகப்போராளிகள் கட்சியின் செயலாளர் கதிர் மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் புதுக்குடியிருப்பு பகுதி வேட்பாளர் ஜன மேனத் ஆகியோர் கருத்துக்களை வழங்கினார்கள்.

இந்த நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டு வணக்கம் செலுத்தியுள்ளார்கள்.

(கு-8)

## நாளை

18.01.2018
வியாழக்கிழமை
நட்சத்திரம் : திருவோணம்
பி.இ.12.59 வரை
திதி : பிரதமை மு.ப. 10.18 வரை
சுபநேரம் : 8.05 – 09.35 வரை
இராகுகாலம்: 2.05 – 03.35 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir



# தேசிய சொத்துக்களை விற்பனை செய்ய அரசு திட்டமிட்டுள்ளது என்கிறது கூட்டு எதிரணி!

கொழும்பு, ஜன. 17

மத்தள விமான நிலையம், ஹில்டன் ஹோட்டல், ஹைட் ஹோட்டல், திருமலை எண்ணெய்க்குதம், காப்புறுதிக் கூட்டுத்தாபனம், இலங்கை போக்குவரத்துச்சபை, ரயில்வேதிணைக்களம், மின்சார சபை, நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை உள்ளிட்ட தேசிய சொத் துகளை விற்பனை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் அவை விற்பனை செய்யப்படவுள்ளன எனகூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் பத்தரமுல்ல நெலும் மாவத்தையிலுள்ள பொதுஜன பெரமுன வின் தலைமையகத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நல்லாட்சி அரசுக்கு 2015 ஆம் ஆண்டு மக்கள் ஆணை கிடைத்தது. ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் நல்லாட்சி, ஜனநாயகம், சட்ட ஆட்சி, நல்லிணக்கம், ஊழல் மோசடிகளற்ற ஆட்சி, அபிவிருத்தியான நாடு போன்றவற்றை தேர்தல் வாக்குறுதிகளாக வழங்கினர்.

எனவே, அதற்கு மக்கள் ஆணை வழங்கினர். எனினும் அரசாங்கம் அவ்வாக்குறுதிகள் எதனையும் நிறைவேற்றவில்லை.

தேர்தலின் பின்னர் பிரதம நீதியரசரை நீக்கிவிட்டு நாடாளுமன்றில் குறைந்தளவான ஆதரவுள்ள ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்கியமையுடன் நல்லாட்சி என்ற விடயம் இல்லாது செய்யப்பட்டது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாது இரண்டரை வருடங்கள் காலம் தாழ்த்தியதனால் ஜனநாயகப் பண்பிலிருந்தும் அரசு விலகியுள்ளது.

மேலும், நாட்டில் ஒவ்வொரு தரப்பினருக்கும் மாறுபட்ட வகையில் நீதி செலுத்தப்படுகிறது. கூட்டுஎதிர்க்கட்சியிலுள்ளவர்களுக்கு ஒருவகையிலும் அரசாங்க தரப்பில் உள்ளவர்களுக்கு மற்றுமொருவகையிலும் நீதிசெலுத்தப்படுகிறது.

கூட்டு எதிர்க்கட்சியிலுள்ளவர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் இரு வாரங்களில் வழக்குத்தாக்கல் செய்கிறார். ஆனால், மத்தியவங்கியில் பெரியளவில் மோசடி இடம்பெற்றுள்ளதுடன் அது தொடர்பிலான ஆவணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.



எனினும், அதற்கு எதிராக சட்டமா அதிபர் நடவடிக்கை எடுப்பதாக இல்லை. எனவே சட்ட ஆட்சியும் இல்லாது செய்யப்பட்டுள்ளது.

அரசு நல்லிணக்கம் பற்றிப் பேசியபோதிலும் நல்லிணக்கமும் அமுலில் இல்லை. இனவாதப் பிரச்சினை மீண்டும் நாட்டில் எழுந்துள்ளது. காலி ஜிந்தோட்டையில் இடம்பெற்ற அசம்பாவிதத்தைக் குறிப்பிடலாம்.

அத்துடன், மத்திய வங்கி பிணைமுறி அறிக்கை ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டுள்ளது. இந்த மோசடியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட ஐக்கிய தேசியக் கட்சியின் 10 உறுப்பினர்கள் வரையில் சம்பந்தப்பட்டிருக்கின்றனர். ஆகவே, ஊழல் மோசடியற்ற ஆட்சியிலிருந்தும் அரசு தவறியுள்ளது.

அத்துடன், அபிவிருத்தி தொடர்பில் அரசு மக்களுக்கு வாக்குறுதியளித்திருந்தது. எனினும், கடந்த மூன்று ஆண்டுகளில் 14.6 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாடுகளிடமிருந்து கடனாகப் பெறப்பட்டுள்ளன.

அந்தக் கடன் மூலம் எவ்வித அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் கடன் பெறப்பட்ட போதிலும் அதன்மூலம் ஏராளமான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கடந்த அரசு ஆரம்பித்த வேலைத்திட்டங்களையே நல்லாட்சி அரசு தற்போது திறந்து வைக்கிறது.

எனினும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தேசிய வளங்களை வெளிநாடுகளுக்குதாரை வார்த்துக்கொண்டு வருகிறார். அம்பாந்தோட்டைத்துறைமுகம் விற்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் இன்னும் பல தேசிய சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மத்தள விமான நிலையம், ஹில்டன் ஹோட்டல், ஹைட் ஹோட்டல், திருமலை எண்ணெய்க்குதம், காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என்பவற்றை யும் விற்பனைசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கை போக்குவரத்து சபை, ரயில்வே திணைக்களம், மின்சார சபை, நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை உள்ளிட்ட வளங்களும் விற்பனை செய்யப்படவுள்ளன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறுமாகவிருந்தால் மேற்சொன்னவளங்கள் அனைத்தும் விற்பனை செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கையின் புதிய வரைபடம்

## விரைவில் பார்வைக்கு




கொழும்பு, ஜன.17

சுமார் 18 வருடங்களின் பின்னர் இலங்கையின் புதிய வரைபடம் தயாரிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் நில அளவைத் திணைக்களத்தால் இதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தக் காலப்பகுதியில் இலங்கை நிலப் பரப்பில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதுடன், புதிய வரைபடத்தில் இலங்கையின் துறைமுக நகரமும் உள்ளடக்கப்படவுள்ளது.

இதேவேளை, இலங்கையின் தெற்கு மற்றும் கிழக்கு கடற்கரைப் பரப்புக்கள் அதிகரித்துள்ளதுடன், சிலாபம் கடற்கரை குறைவடைந்துள்ளது என புதிய வரைப்படம் மூலம் விளங்குகின்றது என நிள அளவையாளர் அதிகாரி உதயகாந்த தெரிவித்துள்ளார்.

இலங்கையின் புதிய வரைபடம் செய்மதி உதவியுடன் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், இதன் பணிகள் நிறைவடைந்ததும் புதிய வரைபடம் உத்தியோகபூர்வமாக நில அளவைத் திணைக்களத்தின் இணையத் தளத்தில் வெளியிடப்படுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனாதிபதித் தேர்தலுக்குக் கூட்டு எதிரணி தயாராகவே உள்ளது என்கிறார் கெஹலிய

கொழும்பு, ஜன. 17

எதிர்வரும் 2019 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் அறிவிக்கப்படவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு கூட்டு எதிரணி தயாராகவே இருக்கின்றது.

வெற்றிபெறும் ஜனாதிபதி வேட்பாளரை களமிறக்குவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்று கூட்டு எதிரணியின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பதவிக்காலம் ஐந்து வருடங்கள் மட்டுமேயாகும் என்று உயர்நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே கூட்டு எதிரணியின் முக்கியஸ்தர் ரம்புக்வெல மேற்கண்டவாறு கூறியுள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உயர்நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு 2019 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் விடுக்கப்படவேண்டும்.

அதன்படி நாங்கள் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்குத் தயாராகி விட்டோம். அதாவது, வெற்றி பெறக்கூடிய ஜனாதிபதி வேட்பாளரை நிறுத்துவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். குறிப்பாக சிங்கள மற்றும் தமிழ் மக்களினதும் ஆதரவைப் பெறக்கூடிய வேட்பாளரை களமிறக்குவோம்.

நாங்கள் ஏற்கனவே ஜனாதிபதி வேட்பாளரை தீர்மானித்து விட்டோம். அவரை நேரம் வரும் போது களமிறக்குவோம். அதாவது எதிர்வரும் ஜனா திபதித் தேர்தலில் வெற்றி பெறும் வேட்பாளரை நாங்கள் களமிறக்குவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# விபத்தில் பாடசாலை மாணவன் படுகாயம்


ஹற்றன், ஜன. 17

ஹற்றனில் இடம்பெற்ற வீதிவிபத்தில் மாணவன் ஒருவன் படுகாயமடைந்த நிலையில் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹற்றன் டிக்கோயா பிரதான வீதியில் ஹற்றன் எம்.ஆர் நகரப் பகுதியில் நேற்றுக் காலை 7 மணியளவில் குறித்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்தில் 18 வயதுடைய பாடசாலை மாணவனே காயமடைந்துள்ளார்.

டிக்கோயா பகுதியிலிருந்து ஹற்றன் பகுதியை நோக்கி பாடசாலை மாணவர்களை ஏற்றிச்



சென்ற ஓட்டோ ஒன்றும், ஹற்றன் பகுதியிலிருந்து டிக்கோயாப் பகுதியை நோக்கிச்சென்ற கார் ஒன்றுமே இவ்வாறு மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. (க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தனியார் பஸ் உரிமையாளர்கள் நேற்று பணிப் பகிஷ்கரிப்பு!





கல்முனை,ஜன.17

இணைந்த சேவையையும் நிரந்தர தரிப்பிடத்தையும் கோரி கல்முனை தனியார் பஸ் உரிமையாளர்கள் நேற்று காலை முதல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

தங்களது கோரிக்கைகளை உரியவர்கள் இதுவரை காலமும் கருத்தில் எடுக்கவில்லை எனவும் இதற்கான உரிய தீர்வை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வழங்க வேண்டும் எனவும் இணைந்த சேவையினையும் நிரந்தர தரிப்பிடத்தையும் கோரி தங்களது ஆர்ப்பாட்டத்தை நடத்திவருகின்றோம் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கருத்துத் தெரிவித்தனர்.

கிழக்கு மாகாண வீதிப் போக்குவரத்து அதிகார சபையே எங்களுக்கு நீதி இல்லை?, கல்முனை பொது தரிப்பிடம் என்ன கல்முனை வீதிக்கு மட்டுமா சொந்தம், உயர்நீதிமன்றத் தீர்ப்பை உறுதிப்படுத்தும் இணைந்த சேவையை நிரந்தரமாக்கு, தீர்வின்றேல் சாத்வீகமாக தொடரும் காந்திவாதிகள் நாங்கள், அரசியல் வாதிகள் எங்களது நீண்டநாள் கோரிக்கைக்கு ஏன் மௌனம்? ஆகிய சுலோக அட்டைகளை ஏந்தியவாறு பஸ்களின் மேல் ஏறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பாக தனியார் பஸ் சங்கத் தலைவர் இ.மகேஸ்வரன் கருத்து தெரிவிக்கையில்-

எங்களது சங்கம் இணைந்த சேவையைப் பெற்றுத்தருமாறும், தனியான பஸ் தரிப்பிடம் ஒன்றை தருமாறும் மூன்று வருடங்களாகப் போராடி வருகின்றோம். ஆனால், இது வரை எந்த விதமான தீர்வும் இல்லாத நிலையிலே இந்தப் பணிப் பகிஷ்கரிப்பை மேற்கொண்டு வருகின்றோம் என்று தெரிவித்துள்ளார். (ப)

# பாடசாலை மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்



திருகோணமலை,ஜன.17

திருகோணமலை - வெருகல் பிரிவில் உள்ள உப்பூரல் மற்றும் சீனன்வெளிப் பாடசாலைகளுக்குக் கற்றல்உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு நேற்று ரோட்டரிகழகத்தினரால் நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது, இரு பாட சாலை மாணவர்களது பிரச்சினைகள் தொடர்பில் அறிந்து, அவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

# ஏறாவூரில் காணாமற்போன மூதாட்டி கொழும்பில் மீட்பு

ஏறாவூர்,ஜன.17

ஏறாவூர், புன்னைக்குடாப் பிரதேசத்தில் வைத்து கடந்த 11ஆம் திகதி காணாமற்போயிருந்த 60 வயதுடைய பெண் கொழும்பில் ஒரு வீட்டில் இருந்துள்ளார் என அவரது மகன் தங்கவேல் தர்மராஜ் தெரிவித்துள்ளார்.

இந்தபெண்காணாமற்போனமை தொடர்பில் ஊடகங்களில் செய்திகள் வெளியான நிலையில், அவரைக் கொழும்பில் ஒரு வீட்டில் வைத்து பராமரித்து வருகிறோம் என அவ் வீட்டார் தகவல் வழங்கியுள்ளனர்.

அவ்வீட்டார்வழங்கிய தகவலுக்கமையவே தனது தாயைக் கண்டு பிடித்துள்ளோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

புன்னைக்குடா வீதியை அண்டி வாழும் 60 வயதுடைய, 5 பிள்ளைகளின் தாயான சுமத்திரா தங்கவேல் காணாமற்போயுள்ளார் என அவரது மகனால் ஏறாவூர்ப் பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு பதிவு செய்யப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப)






# மாடு மேய்க்கச் சென்ற இளைஞனின் மரணம் தொடர்பில் விசாரணை

ஏறாவூர்,ஜன.17

ஏறாவூர்ப்பற்றுக் காரைக்கட்டுப் பிரதேசத்தில் இளைஞன் ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

20 வயதான காரைக்கட்டு பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மாடு மேய்க்கும் இந்த இளைஞன், வழமைபோல் மாட்டுப்பொங்கல் தினமான நேற்று முன்தினம் மாடுகளை மேய்ச்சலுக்கு கொண்டு சென்ற பின்னரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ள நிலையில் மரணத்திற்கான காரணம் தொடர்பில் இதுவரையில் கண்டறியப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ப)

# 2018 இற்கான வித்தியாரம்ப விழா





மட்டக்களப்பு,ஜன.17

மாளிகைக்காடு - சபீனா முஸ்லிம் வித்தியாலயத்தில் 2018ஆம் ஆண்டின் தரம் 1இல் அனுமதி பெற்ற புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.ஐ.எம் அஸ்மி தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போது, புதிய மாணவர்கள் வரவேற்கப்பட்டதுடன், அவர்களுக்கு வித்தியாரம்பம் அதிதிகளால் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்வில் முன்னாள் கல்விப் பணிப்பாளர் எம்.சி. ஆதம்பாவா மற்றும் பாடசாலையின் இணைப்பாளர் எஸ்.சிவசுந்தரமூர்த்தி, அம்பாறை மாவட்ட மருத்துவ விற்பனை பிரதிநிதி எஸ்.ஏ.சமட், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் தகவல் தொழில்நுட்பத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு இந்திய அரசு உதவும்!



கொழும்பு, ஜன. 17

தகவல் தொழில்நுட்பத் துறையை அபிவிருத்தி செய்வது மற்றும் புதிய போக்குகளை அடையாளம் காண்பதற்கு இலங்கைக்கு இந்தியா உதவும் என்று இந்திய மத்திய அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் உறுதியளித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இந்தியாவின் சட்டம் மற்றும் நீதி, இலத்திரனியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சரான ரவிசங்கர் பிரசாத் நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இதன்போதே, தகவல் தொழில்நுட்பத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு சிறிலங்காவுக்கு இந்தியா உதவும் என்று இந்திய அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் உறுதிஅளித்தார்.

அத்துடன், இந்தச் சந்திப்பில் பங்கேற்ற இலங்கையின் சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க, இணையப் பாதுகாப்புத் தொடர்பாக சிங்கப்பூர் அரசுடன் இலங்கை பேச்சுக்களை நடத்தி வருகிறது என்றும் இது தொடர்பாக இந்திய அரசின் உதவியையும் கோருவதற்கு இலங்கை அரசு எதிர்பார்த்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையின் அபிவிருத்தி சமாதானத்தில் உண்மையான பங்காளியாக இந்தியா இருக்கும் என்றும் அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள சர்வதேச கற்கைகளுக்கான லக்ஷ்மன் கதிர்காமர் நிலையத்தில் நேற்றுமுன்தினம் மறைந்த முன்னாள் வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நினைவுப் பேருரை நிகழ்த்துகையிலேயே இந்திய மத்திய அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்தியாவின் சட்டம் நீதித் துறை தகவல் தொழில்நுட்பம் மற்றும் இலத்திரனியல் துறை அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் இந்த நிகழ்வில் மேலும் உரையாற்றுகையில்–

இலங்கையின் மறைந்த முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சிறந்த இராஜதந்திரியாக இருந்தமையுடன் இந்தியாவின் சிறந்த நண்பராகவும் திகழ்ந்தார். இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையிலான உறவின் விழுமியங்களை உணர்ந்தவராக லக்ஷ்மன் கதிர்காமர் செயற்பட்டார்.

இலங்கையும் இந்தியாவும் வரலாறு, கலாசாரம் உள்ளிட்ட விடயங்களில் ஆழமான மற்றும் பலமான உறவைக் கொண்டுள்ளன. இந்தியாவின் சுதந்திர போராட்ட வீரர்கள் இலங்கையின் சுதந்திர போராட்ட வீரர்களுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தனர். உலகில் இரண்டு நாடுகளுக்கு இடையிலான நெருக்கமான உறவுக்கு சிறந்த மாதிரியாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு காணப்படுகிறது.



மத்திய அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் உறுதியளித்தார்

அண்மையில் இலங்கை பிரதமர் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தார். இதன்போது இரண்டு நாடுகளுக்கிடையிலான இருதரப்பு உறவு மற்றும் அபிவிருத்தி கூட்டுறவு குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது. இந்நிலையில் இங்கு முக்கிய விடயம் ஒன்றை குறிப்பிடுகின்றேன்.

அதாவது, இந்தியாவானது இலங்கை மக்களின் எதிர்காலம் அபிவிருத்தி மற்றும் சமாதானம் என்பனவற்றில் சிறந்த உண்மையான பங்காளியாக தொடர்ந்து செயற்படும். இலங்கையில் மேற்கொள்ளப்படும் உதவி திட்டங்களில் செல்வாக்கு செலுத்தும் அணுகுமுறை எம்மிடம் கிடையாது. மாறாக மக்களின் விருப்பத்துக்கு அமைவாகவே எமது உதவிகள் மற்றும் கடனுதவிகள் அமையும்.

கடந்த 70 வருடங்களில் இந்தியா பாரிய ஜனநாயக பயணத்தை மேற்கொண்டுள்ளது. இந்தியாவானது மக்களின் உரிமையை பலப்படுத்தி அவர்களை வலுவூட்டும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது. மக்களின் சுதந்திரமே இந்தியாவின் மிகப் பெரிய பலமாகும். வன்முறையை நம்பி இந்தியா செயற்படவில்லை. வன்முறைகளை பயன்படுத்தும் சக்திகள் தோல்வியை தழுவுகின்றன.

இந்தியாவின் அரசமைப்பு இன்று உலகளவில் பேசப்படும் அரசலமைப்பாக உள்ளது. பல்வேறு உலக நாடுகள் பெண்களுக்கான வாக்களிப்பு உரிமையை வழங்குவது குறித்து ஆராயும்போது இந்தியா பெண்களுக்கான வாக்களிப்பு உரிமையை வழங்கியது.

1965ஆம் ஆண்டு இலங்கை உலன் முதலாவது பெண் பிரதமரை உருவாக்கியது. அடுத்தவருடம் 1966 ஆம் ஆண்டு இந்தியாவும் பெண் பிரதமரை உருவாக்கியது.

தற்போது பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் இந்தியா அனைத்து துறைகளிலும் முன்னேறிச் செல்கின்றது. எனினும் சில சவால்கள் எமக்கு உள்ளன. குறிப்பாக வறுமை குறித்த சவாலை வெற்றி கொள்ளச் செயற்பட்டு வருகின்றோம்.

தற்போது இந்தியா டிஜிட்டல் வேலைத்திட்டத்தை பரவலாக முன்னெடுத்து வருகின்றது. குறிப்பாக, தகவல் தொழில்நுட்பத் துறையில் உலகில் முன்னணியில் இருக்கவேண்டும் என்று இந்தியா விரும்புகின்றது. டிஜிட்டல் தகவல் தொழில்நுட்பம் மக்களை பலப்படுத்துகின்றது.

இலங்கையின் பல்கலைக்கழகங்களுடனும் எமது டிஜிட்டல் இந்தியா வேலைத்திட்டத்தில் இணைந்து பணியாற்ற முன்வந்துள்ளோம். அதாவது, இந்தியாவின் டிஜிட்டல் இந்தியா வேலைத்திட்டத்தில் இலங்கைக்கு முழுமையான உதவியை வழங்குவதற்கு மோடி அரசு தயாராக இருக்கின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மூன்று நாள்கள் விஜயமாக இலங்கை வந்துள்ள இந்திய மத்திய அமைச்சர் ரவிசங்கர் பிரசாத், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும், அமைச்சர்கள் பலரையும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

# சகல பாடசாலைகளுக்கும் மடிக் கணினிகள் வழங்கல்

### *கல்வி அமைச்சர் தெரிவிப்பு*



நாடளாவிய ரீதியில் உள்ள சகல பாடசாலைகளிலும் தரம் 6 தொடக்கம் உயர்தரம் வரையிலான வகுப்புக்களுக்கு மடிக் கணினிகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

மடிக் கணினிகளை வழங்கும் வேலைத்திட்டம் எதிர்வரும் இரண்டு மாதங்களில் மேற்கொள்ளப் படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச ரீதியில் தற்போது கல்வி நடவடிக்கைகள் தொழில்நுட்பமயப்படுத்தப்பட்டுள்ளன. சர்தேச ரீதியில் அபிவிருத்தியடைந்த நாடுகள் பலவற்றில் ஆரம்பக் கல்வி தொடக்கம் கல்வி நடவடிக்கைகள் தொழில்நுட்ப ரீதியிலேயே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், தற்போது இலங்கையிலும் கல்வி நடவடிக்கைகளை தொழில் நுட்ப ரீதியில் முன்னெடுக்க நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், தற்போது இலங்கையின் கல்வித் துறை முன்னைய காலங்களை விடவும் பெரும் முன்னேற்றங்களை அடைந்து வரும் நிலையில், மேலும் அதனை விருத்தி செய்யும் வகையிலான செயற்றிட்டங்களை அரசு, கல்வி அமைச்சு மற்றும் மாகாணக் கல்வி அமைச்சு என்பன இணைந்து முன்னெடுத்து வருகின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் வெளிநாடுகளிலிருந்தும் இதற்கான உதவிகள் கிடைக்கப் பெறுகின்றன.

அதனடிப்படையில் இலங்கையின் தமிழ் மொழிமூலமான பாடசாலைகளுக்கு இலவச நூல்களைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் ஆசிரியர் பரிமாற்றம் பற்றிய செயற்றிட்டம் தொடர்பான கலந்துரையாடல் இந்தியாவில் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# முல்லையில் மஹிந்தவின் கட்சி அலுவலகங்கள் திறந்து வைப்பு!

முல்லைத்தீவு, ஜன.17

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் அலுவலகங்கள் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

முள்ளியவளை, கிச்சிராபுரம், சிலாவத்தை, செம்மலை,வெலி ஓயா போன்ற பகுதிகளில் 7 அலுவலகங்கள் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளன என கட்சியின் மாவட்ட இணைப்பாளர் துசார தெரிவித்துள்ளார்.



நேற்று நண்பகல் 12 மணியளவில் முள்ளியவளை கிச்சிராபுரத்தில் நடைபெற்ற கட்சி அலுவலக திறப்பு விழா நிகழ்வில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் வடமாகாண இணைப்பாளரும் வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சருமான எஸ்.எம்.றஞ்சித் அலுவலகத்தைத் திறந்து வைத்துகருத்துரைநிகழ்த்தியுள்ளார்

இதன்போது முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் உள்ளிட்ட வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க.8)

# கேப்பாபிலவு மக்களுக்கு படையினரால் மதிய உணவு!



முல்லைத்தீவு, ஜன. 17

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவுப் பிரதேச கேப்பாபிலவு மீள் குடியேற்ற மக்களுக்கு முல்லைத்தீவுப் பாதுகாப்புப் படையினரால் மதிய உணவு வழங்கப்பட்டது.

காணி உறுதிப்பத்திரம் வழங்கப்பட்டு கேப்பாபிலவு பிரதேசத்தில் மீள் குடியேற்றப்பட்ட 85குடும்பங்களுக்கே படையினரால் கடந்த ஞாயிற்றுக் கிழமை மதிய உணவு வழங்கப் பட்டது.

இந்த நிகழ்வுகள் முல்லைத்தீவுப் பாதுகாப்புப் படைத் தளபதியான மேஜர் ஜெனரல் துஷ்யந்த ராஜகுருவின் வழிகாட்டலில் நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாட்டை நோக்காகக் கொண்டு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகன உதிரிப்பாக விற்பனை நிலையத்தில் தீ!

மாத்தறை, ஜன.17

மாத்தறை துடாவ பிரதேசத்தில் வாகன உதிரிப்பாகங்களை விற்பனை செய்து வந்த வீடொன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட இந்தத் தீயை மாத்தறை பொலிஸார், பிரதேசவாசிகள் மற்றும் மாத்தறை மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர் இணைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

## ஆங்கில மொழித்திறன் இலவச வகுப்பு

அரியாலை சனசமூக நிலையத்தால் இலவசமாக ஆங்கில மொழித் திறன் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த ஆங்கில மொழித்திறன் வகுப்புக்கள் 10 வயது தொடக்கம் 15 வயது வரையான மாணவர்களுக்கு நடத்தப் படவுள்ளது.

இவ்வகுப்பில் இணைய விரும்புவோர் சனசமூக நிலையத்துடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (இ

## தினசரி ராசி பலன்
(17.01.2018)

*2018ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் தைத் திங்கள் 4ஆம் நாள் புதன்கிழமை அமாவாசைத் திதி காலை 7.47 வரை. நட்சத்திரம். உத்தராடம் இரவு 7.22மணிவரைபின்னர்உத்தராடம். இரவு 10.18 மணிவரை பின்னர் அமிர்த சித்தயோகம் முழுவதும்.*

**ராகுகாலம்** *-பகல் 12.20 மணி முதல் 1.46மணி வரை*

**சுபநேரம்** *- மாலை 05.06 மணி முதல் 06.36 மணி வரை இன்று அமாவாசை விரதம்.*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *தைமாத வளர்பிறை பிரதமை* **பிறந்த நட்சத்திர வழிபாடு:***உத்தராடம்*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதார நிலை சமமாக இருக்கும். உடல் நலக் குறைவால் மருத்துவச் சிகிச்சை செய்ய வேண்டி வரும். குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் உண்டாகும்.

**ரிஷபம்** அதிஷ்டமான நாள். பணபலம் அதிகரிக்கும். நீண்ட நாள் எதிர்பார்த்த காரியம் தடையின்றி நிறைவேறும்.சுய தொழில் செய்து வருபவர்களின் வியாபாரம் பயனுள்ளதாக அமையும். அதிஷ்டச் சீட்டுக்களால் லாபம் உண்டு.

**மிதுனம்** கவலையான நாள். பணவரவு குறையும். தொழிலில் அதிக அலைச்சலால் உடல் சோர்வு உண்டாகும். வியாபாரிகளுக்கு விற்பனையின் சற்று மந்த நிலை உண்டாகும். வேலை தேடுவோருக்கு வேலை கிடைப்பது கடினம்.

**கடகம்** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். தொழில் சிறப்பாக அமையும். வெளியூர்ப் பயணம் பய னுள்ளதாக அமையும். வீடு, வாகன யோகம் உண்டாகும்.

**சிம்மம்** ஆக்க பூர்வ பலன்கள் காணப்படுகின்றன. பணப் புழக்கம் தாராளமாக இருக்கும். பேச்சாற்றலும் செயல் திறமையும் பெருகும். உடல் நலன் ஆராக்கிய மாக இருக்கும். உறவினருடனிருந்த பகை விலகும்.

**கன்னி** அனுகூலமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப உறவு மேம்படும். சுயதொழில் செய்ய சிலருக்கு வாய்ப்புக்கள் கிட்டும். தனியார் வழிச் சொத்துக்கள் வந்து சேரும்.

**துலாம்** சஞ்சலமான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் அமைதியின்மை காணப்படும். உடல் சோர்வு பணியில் விருப்பமின்மை போன்ற செயல்கள் ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு வேலையில் சிரமம் உண்டாகும்.

**விருச்சிகம்** சமபலன்கள் காணப்படுகின்றன. உரிய நேரத்தில் பணம் வந்து சேராததால் சிரமங்கள் அடைய வேண்டி வரும். வாகனங்களில் செல்லும் போது கவனமாக இருப்பதுடன் அதிக வேகத்தைத் தவிர்ப்பது நல்லது.

**தனுசு** யோகமான நாள். பணம் பல வழிகளாலும் வந்து சேரும். குடும்ப உறவில் அன்பும் பண்பும் நிறைந்திருக்கும். எடுக்கும் முயற்சிகளில் முன்னேற்றம் உண்டாகும். வாகன யோகமும் உண்டாகும்.

**மகரம்** அதிஷ்டமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். வியாபாரிகளுக்கு புத்திசாலித் தனமும் வியாபார தந்திரமும் விற்பனையை அதிகரிக்கச் செய்யும். உறவினர்களின் ஆதரவு பயனுள்ளதாக அமையும்.

**கும்பம்** அலைச்சல் மிகுந்த நாள். தொழில் ரீதியான அலைச்சல் அதிகமாகும். சிலர் படித்து விட்டு வேலை தேடி அலைவார்கள். பொருளாதார நெருக்கடியால் சிலர் கடன் வாங்க அலைவார்கள்.

**மீனம்** நன்மையான நாள். வருமானம் வளமாக இருக்கும். செய்யும் தொழிலில் ஆர்வமும், அக்கறையும் அதிகமாகும். தொழில் தடை நீங்கி, சுபீட்சம் உண்டாகும். சகோதர வழி உதவிகள் கிடைக்கும்.

**சந்திராட்டமநாள்: உத்தராடம் 2ஆம், 3ஆம், 4ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1ஆம், 2ஆம் பாதங்களில் பிறந்தோர் நற்கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# வில்பத்து விவகாரத்திற்கு ரிஷாத் பொறுப்பேற்க வேண்டும்!

## ரஞ்சன் ராமநாயக்க தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 17

சுற்றுச் சூழலை சேதப்படுத்துபவர்களுக்கு எதிராக அனைவரும் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதியமைச்சர் ரஞ் சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், வில்பத்து வனப் பகுதி சேதப்படுத்தப்பட்டமைக்கு, அமைச்சர் ரிஷாத் பதியுதீனே பொறுப்பேற்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

திவுலப்பிட்டிய பகுதிக்குச் சென்றிருந்த வேளை, ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

# சமூக ஒற்றுமையைச் சீர்குலைத்து குளிர்காய்வோர் தொடர்பில் எச்சரிக்கை!

## மஸ்தான் எம்.பி. கூறுகிறார்

இனவாதத்தை கையிலெடுத்து தமது அரசியலை கொண்டு செல்வதற்கு சிலர் புறப்பட்டிருக்கிறார்கள்.

அவர்கள் தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்கவேண்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவருமான மஸ்தான் காதர் தெரிவித்துள்ளார்.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கு மகா இறம்பைக் குளத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கட்சி காரியாலயத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது கட்சியின் வேட்பாளர்களை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

இவர்களிடம் இருந்து நல்ல சேவைகள் இந்தப் பிரதேசத்திற்கு கிடைக்க வேண்டுமானால் இந்தத் தேர்தலில் அதற்கான ஆணையை வழங்கி அவர்களை வெற்றி பெறச் செய்யவேண்டும்.

அதன் மூலம் எமது மேலதிகமான செல்வாக்கை பயன்படுத்தி அரிய பல அபிவிருத்திகளை இந்தப் பிரதேசங்களில் செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (112)

## பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையம் இடைக்காட்டில் திறப்பு

அச்சுவேலி, ஜன.17

அச்சுவேலி, இடைக்காடு பகுதியில் பிரம்ம குமாரிகள் இராஜயோகம் நிலையமொன்று நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இத்திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக வட மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம் கௌரவ விருந்தினராக யாழ்ப்பாண வலய கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா, சிறப்பு விருந்தினர்களாக சமூக சேவைகள் திணைக்கள யாழ். மாவட்ட இணைப்பாளர் திருமதி கிருசாந்தி விக்னேஸ்வரன், வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் யு. ஜெலீபன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

## நாளை மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழன் காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**மன்னார் பிரதேசத்தில் -**

உயிலங்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், அடம்பன் நீர்ப்பாசன சபை, கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், C.T.B மன்னார், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, ரைமெக்ஸ் கார்மெண்ட், விசேட அதிரடிப்படை முகாம், எருக்கலம்பிட்டி பம் கவுஸ், பேசாலை Palmayrah House, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, மீன்பிடி சமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் வைத்தியசாலை, தலைமன்னார் கடற்படைமுகாம், சீனத் துறைமுகம் ஆகிய பிரதேசங்களிலும்–

**வவுனியா பிரதேசத்தில் -**

சாந்தசோலை கிராமம், கொக்கிளிய, அக்போபுர, கோவில்குளம், ஆச்சிபுரம், சமணன்குளம், மகாமயிலங்குளம், மருதநகர், எல்லப்பமருதங்குளம், பெரியகூமரசங்குளம், ஆசிக்குளம், சிதம்பரபுரம், அட்டம்பஸ்கட கிராமம், தவசிக்குளம் கிராமம், பண்டாரிக்குளம் கிராமம் ஆகிய இடங்களிலும் –

மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## முன்பள்ளி ஆசிரியர் தொழிற் சங்க கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன.17

வடமாகாண முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் தொழிற் சங்கக் கருத்தரங்கு எதிர் வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வைமன் வீதியிலுள்ள 'ஆறுதல்' கருத்தரங்கு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு ''தொழிற்சங்க நிர்வாகமும் முன்பள்ளி ஆசிரியர்களும்'' எனும் தொனிப் பொருளில் இடம்பெறவுள்ளது. இதில் ஆறுதல் நிறுவன ஆலோசகர் ந.அனந்தராஜ், வடமாகாண கல்வி அமைச்சின் ஆரம்பப் பிள்ளை அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா, ஆறுதல் நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி சு.டிவகலாலா, வடக்கு வலய பிரதித் தொழில் ஆணையாளர் திருமதி நீலலோஜினி ஜெகதீஸ்வரன் மற்றும் தொழில் திணைக்கள சிரேஷ்ட தொழில் உத்தியோகத்தர் கந்தசாமி நாகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கவுள்ளனர்.

மாலை 4 மணியளவில் சான்றிதழ் வழங்கலுடன் கருத்தரங்கு நிறைவு பெறும்.

சங்க நிர்வாகக் குழு அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு செயலாளர் ச. ஜெகதாரணி கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir



# கட்சிகளின் மத்தியில் ஒற்றுமை இல்லையேல்

# தமிழ்மக்கள் வாக்களிக்க தயக்கம் காட்டுவர்



தமிழ்மக்களின் கூட்டமைப்பு என்று மக்கள் மத்தியில் செல்லும் தமிழ் கட்சிகள் முதலில் உங்கள் மத்தியில் ஒற்றுமையை உருவாக்க வேண்டும். அத்துடன், மக்கள் மத்தியில் நீங்கள் நம்பிக்கை ஊட்ட வேண்டும் இல்லையேல் மக்கள் தங்கள் வாக்கை அளிப்பதற்கு தயக்கம் காட்டுவர் என மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு பிடேலியஸ்லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்தார்.

மன்னார் மறைமாவட்டத்துக்கு மூன்றாவது ஆயராகத் தெரிவு செய்யப்பட்டு கடந்தமாதம் 30 ஆம்திகதி (30.12.2017) தனது மறைமாவட்ட பணியை பொறுப்பேற்ற ஆயர் மேதகு பிடேலியஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையை நமது செய்தியாளர் செவ்வி கண்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

**கேள்வி**

மன்னார் மறைமாவட்டத்துக்கு மூன்றாவது ஆயராகப் பொறுப்பேற்று இருக்கும் தாங்கள் இம் மறைமாவட்டத்தில் உங்கள் பணியை எவ்வாறு முன்னெடுத்துச் செல்ல இருக்கின்றீர்கள்?

**பதில்**

கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் துணை ஆயராக நான் 2011 ஆம் ஆண்டு அபிஷேகம் செய்யப்பட்டு 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலிருந்து நான் பணியாற்றி வந்தேன்.

அவ்வேளையில் அப்பகுதியில் நான் வெவ்வேறு வழிபாட்டு நிகழ்வுகளிலும் பணிகளிலும் ஈடுபட்டு வந்தேன். அது உறுதிப்பூசுதலாக இருக்கலாம் யூபிலி விழாக்களாக இருக்கலாம் கோவில் திருவிழாக்களாகவும் இருக்கலாம் அவைகளில் பங்குபற்றி வந்தேன்.

கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக நான் நீர்கொழும்பு மறைக் கோட்டத்திலுள்ள பங்குகளுக்கு பிரத்தியேகமாக பல சேவைகளை ஆற்றி வந்தேன்.

இப்பொழுது ஒரு மறை மாவட்டத்துக்கு அதுவும் மன்னார் மறைமாவட்டத்துக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளேன். நான் இயன்ற அளவு இம் மன்னார் மறை மாவட்டத்துக்கு உதவிகள் புரிவதற்கான எண்ணத்துடனே இருந்து வருகின்றேன்.

மன்னார் மறைமாவட்டம் ஒரு சிறிய மறைமாவட்டமல்ல மன்னார் மாவட்டமும் வவுனியா மாவட்டமும் சேர்ந்த ஒரு மறை மாவட்டமாக இருக்கின்றது.

இந்த மாவட்டத்தில் 270 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் இருக்கின்றனர். இவர்களில் சுமார் 90 ஆயிரம் கத்தோலிக்க மக்களும் காணப்படுகின்றனர்.

இப்படியான இந்த மறைமாவட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்ட அருட்பணியாளர்கள் இருக்கின்றார்கள். இவர்களுடன் 250 இற்கு மேற்பட்ட அருட்சகோதரர் சகோதரிகள் இருக்கின்றார்கள். 43 பங்குத் தளங்கள் இருக்கின்றன.

எனது பணி இவைகளையெல்லாம் ஒன்று சேர்த்து இம் மறைமாவட்டத்தை முன்னேற்றுவதே ஆகும்.

யுத்தத்துக்குப்பின் தற்பொழுது வாழும் இம் மக்கள் பலவிதமான சவால்களை எதிர் நோக்கி இருக்கின்றனர்.

இவர்களுக்கு மத்தியில் பலவிதமான கவலைகள் அங்கலாய்ப்புக்கள் இருக்கின்றன. இப்படியான சூழ்நிலையில் வாழும் மக்களுக்கு இன்னும் எத்தனையோ விதத்தில் இப் பிரதேசத்தில் ஒரு சீரமைப்பு இடம்பெற வேண்டிய அவசியம் காணப்படுகின்றது.

இவர்களுடைய வளங்கள் மேம்பட நாம் சமூதாயமாக இணைந்து செயல்பட வேண்டியுள்ளது. இப்படியான நிலையில் மக்களைப் புரிந்துகொண்டு நாங்கள் மக்களுக்கு உதவி செய்வதற்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

**கேள்வி**

தங்களுக்கு முன்னர் இரு ஆயர்கள் மன்னார் மறைமாவட்டத்தைக் கொண்டு சென்றுள்ளனர். அந்த வகையில் தங்கள் வழி எவ்வழியாக அமைய இருக்கின்றது?

**பதில்**

ஆம் எனக்கு முன்பு இம் மறைமாவட்டத்தில் இருந்த ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை இவரைத் தொடர்ந்து வந்த ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை இவர்கள் இங்கு பலவிதமான முன்னேற்றங்களை முன்னெடுத்துச் சென்றுள்ளனர்.

இவர்கள் இங்குள்ள மக்களுக்காக அரும்பாடுபட்டு கடினமாக உழைத்திருக்கின்றமையைக் காணக் கூடியதாக இருக்கின்றது. இவர்களின் இந்த உன்னதமான பணியை தொடரத்தான் என்னை இறைவன் இங்கு அழைத்திருக்கின்றார் போலும்.

இதனால் இப்படியான இவர்கள் தொடர்ந்த பணியை ஆற்றுவதற்கு என்னால் இயன்றதை நான் செய்ய இருக்கின்றேன்.

இதற்கு மன்னார் பிரதேசம் ஆண்டவருடைய ஆசீர்வாதத்தால் சிறப்பிக்கப்பட்டு மக்கள் சந்தோஷமாக வாழ இப் புத்தாண்டில் பதிய உலகம் நீதியுடன் திகழ வேண்டும் என நான் இந்நேரத்தில் இறையாசீரும் வேண்டி நிற்கின்றேன்.

**கேள்வி**

ஆன்மீகத் துறையில் ஆயராகிய நீங்கள் எந்தவிதமான செயற்பாடுகளைக் கொண்டு முன்னெடுக்க இருக்கின்றீர்கள்?

**பதில்**

ஆன்மீக ரீதியை நோக்கும்போது மருதமடு மாதா மன்னார் மறைமாவட்டத்துக்கு ஒரு பாதுகாவலராக இருக்கின்றாள். இந்த மருதமடு ஸ்தலம் ஒரு புனித ஸ்தலம். இதனால் மக்கள் தங்கள் பக்தி முயற்சியால் இந்த ஸ்தலத்துக்குச் சென்று தங்கள் ஆன்மீகத்தை வளர்த்து வருகின்றனர்.

இப்படியான நிலையில் பொதுநிலையினரின் பலவிதமான சேவைகளை நான் இந்த மறைமாவட்டத்தில் பார்க்கின்றேன்.

இங்கு குடும்பவாழ்வுக்கு குடும்பநல பொதுநிலையினர் நடுநிலையம், மறைக்கல்வி, விவிலிய நிலையம், அன்பியம் திருவழிபாட்டுக் குழு நிலையம், சமூகத் தொடர்பும் பல்சமய உரையாடல் நிலையம், சமூக பொருளாதார அபிவிருத்தி நிலையம் இளைஞர் பணி நிலையம் எனப் பல்வேறு நிலையங்கள் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றன.

இதில் அன்பியம் இறை வார்த்தையை மையமாகக் கொண்டு பகிர்ந்து கொள்ளும் அன்பியங்கள் இன்னும் வளர்ச்சி பெற்று மக்கள் மத்தியில் ஒருவரை அன்பு செய்து ஒருவருக்கு ஒருவர் உதவக்கூடிய வகையில் இந்த அன்பியங்கள் இயங்க வேண்டும். அத்துடன் செபமாலை ஓதும் பழக்கத்தில் ஈடுபடும்போது இறைபக்தியை அதிகரிக்கலாம் என்பதை உணர்த்தி முன்னெடுத்துச் செல்லும்போது ஆன்மீகத்தில் முன்னேற்றம் காணலாம்.

## மன்னார் ஆயர் செவ்வி

**கேள்வி**

மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க மக்களின் ஆயனாக தாங்கள் திகழ்வதாலும் தற்பொழுது தேர்தல் காலமாக இருப்பதாலும் பல கட்சிகளின் பிரதிநிதிகள் உங்களைச் சந்தித்து வருகின்றமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது இது விடயமாக...?

**பதில்**

தற்பொழுது நடைபெற இருக்கும் உள்ளூராட்சிச்சபைத்தேர்தல் நெருங்கிக் கொண்டிருப்பதால் அரசியலை நாம் கவனிக்க வேண்டிய விடயமாக இருக்கின்றது.

மக்கள் உற்சாகமாக இதை மனதில் இருத்தி வாக்களிக்க இருக்கின்றார்களா என்பது எனக்கு இன்னும் சரியாகத் தெரியாது.

ஆனால், என்னைப்பொறுத்தமட்டில் தேர்தல் ஒன்று நடைபெற்றால் அதற்கு மக்கள் வாக்களிக்க வேண்டும். இந்த வாக்குகளின் வழியாக சரியான பிரதிநிதியை மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்.

பொதுக் கூட்டணி என்று கூறும் பொழுது மக்கள் ஒன்று சேர வேண்டும்;. இங்குப்பிரிவினை என்று ஒன்று இருந்தால் அங்கு மக்களுக்கு நன்மை செய்ய முடியாது.

தமிழ்மக்கள் மத்தியில் தமிழ் கூட்டமைப்பு என்று கூறும் பொழுது உண்மையில் அந்த சிந்தனை இவர்களிடம் செயல்பாடாக இருக்க வேண்டும். இவர்களிடம் உண்மையான ஒற்றுமை திகழ வேண்டும் இவர்கள் ஒருவரையொருவர் புரிந்துணர்வுடன் ஒருவரை ஒருவர் ஏற்று அதன் வழியாக நல்ல பிரதிநிதிகளைத் தெரிவு செய்திருந்தால் கத்தோலிக்க மக்கள் தங்கள் வாக்குகளை அளிப்பார்கள். இவைகள் சரியான முறையில் அமைய வேண்டுமானால் தமிழ் அமைப்பினர் ஒற்றுமையாக இருந்து செயற்பட வேண்டும்.

**கேள்வி**

இப்பொழுது மன்னார் மாவட் டத்தை பொறுத்தமட்டில் தமிழ் இனக் கட்சிகள் பிரிந்து நின்று தேர்தலில் போட்டியிடுவதால் எக்கட்சிக்கு வாக்களிப்பது எனத் திண்டாட்டத்தில் இருக்கின்றனர் எனத் தெரிய வருகிறது. ஆகவே, இந்த நிலையில் மக்களுக்கு நீங்கள் எதைக் கூற விரும்புகின்றீர்கள்?

**பதில்**

வேட்பாளர்கள் உண்மையில் மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையை உருவாக்க வேண்டும். மக்களுக்கு நம்பிக்கை இல்லையென்றால் நிச்சயம் மக்கள் வாக்களிக்க தயக்கம் காட்டுவார்கள்.

ஆகவே, வாக்களிப்பதற்கு வாக்காளர்கள் மத்தியில் நம்பிக்கை பிறக்க வேண்டுமானால் வேட்பாளர்கள் நிச்சயம் செயல்திறமை கொண்டவர்களாக இருக்க வேண்டும். தங்கள் சுயநலத்தை விட்டு மக்களுக்கு நன்மை புரிகின்றவர்களாக இருக்க வேண்டும்.

மக்கள் தொடர்ந்து பல துன்பங்களில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். அவர்கள் பல விண்ணப்பங்களை வழங்கிக் கொண்டே இருக்கின்றனர். ஆகவே, இவர்களின் விண்ணப்பங்களை நடைமுறைக்குக்கொண்டுவந்து துன்பத்துக்கு உள்ளாகியிருக்கும் மக்களை தூக்கிவிடும் பிரதிநிதியாக அவர்கள் இருக்க வேண்டும்.- என்றார் ஆயர்.

(இ-112)

*மன்னார் செய்தியாளர்*
**- வாஸ் கூஞ்ஞ -**

> **தற்பொழுது நடைபெற இருக்கும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருப்பதால் அரசியலை நாம் கவனிக்க வேண்டிய விடயமாக இருக்கின்றது. மக்கள் உற்சாகமாக இதை மனதில் இருத்தி வாக்களிக்க இருக்கின்றார்களா என்பது எனக்கு இன்னும் சரியாகத் தெரியாது. ஆனால், என்னைப் பொறுத்தமட்டில் தேர்தல் ஒன்று நடைபெற்றால் அதற்கு மக்கள் வாக்களிக்க வேண்டும். இந்த வாக்குகளின் வழியாக சரியான பிரதிநிதியை மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பு: பொன்.வேணுகிருஷ்ணா





*ஜேர்மனி: சமூக ஜனநாயக கட்சியும் கிறிஸ்துவ ஜன நாயகவாதிகளும் புதிய அர சாங்கம் அமைப்பதற்கான நிலைமைகளை ஆராயும் பேச்சுகளும்*

கிறிஸ்துவ ஜனநாயக ஒன்றியம் (CDU), கிறிஸ்துவ சமூக ஒன்றியம் (CSU) மற்றும் சமூக ஜனநாயகக் கட்சி (SPD) இவற்றின் தலைவர்கள் ஒரு புதிய அரசாங்கம் அமைப்பதற்கான முதல் சுற்றுப் பேச்சுகளுக்காக அண்மையில் சந்தித்தனர். கூட்டாட்சி தேர்தல் முடிந்து 80 நாள்கள் கடந்த பின்னரும், இரு தரப்பும், பேச்சுகள் 'முடிவடையவில்லை' என்று வலியுறுத்துகின்றன. நிலைமைகளை ஆராயும் பேச்சுவார்த்தைகள் முன்நகருமா என்பதைக் காண்படதே' பிரச்சினையின் பணயத்தில் இருப்பதாக சான்சிலர் அங்கேலா மேர்க்கெல் (CDU) தெரிவித்தார்.




மூன்று கட்சிகளும் இன்னமும் அரசாங்கத்தில் உள்ளன. சில பிரதிநிதிகள் கடந்த நான்காண்டுகளாக ஒவ்வொரு வாரமும் ஒருவரிடம் இருந்து ஒருவர் மந்திரிசபை மேசையில் மாறிக் கொள்கின்றனர் என்பதை ஒருவர் கருத்தில் கொள்ளும் போது, இந்த தந்திரோபாய அணுகுமுறை முற்றிலும் அர்த்தமற்றதாகத் தெரிகிறது. இது ஏனென்றால் மகா கூட்டணியின் கொள்கைகள் மக்கள் மத்தியில் ஆழமாக செல்வாக்கிழந்துள்ளன என்ற உண்மையினால் ஆகும்.

சமூக ஜனநாயகக் கட்சியின் பல அங்கத்தவர்களும், CSU மற்றும் CDU இல் சிலரும் கூட, மகா கூட்டணியைத் தொடர்வது அவர்களது கட்சிகளின் சரிவைத் தீவிரப்படுத்துமென அஞ்சுகின்றனர். செப்ரெம்பரில் நடந்த கூட்டாட்சித் தேர்தலில் இந்த மூன்று கட்சிகளுமே 70 ஆண்டுகளில் அவற்றின் மிக மோசமான தேர்தல் முடிவுகளைச் சந்தித்தன.



இந்தக் காரணத்தால் தான், மகா கூட்டணியைத் (Groko) தொடர்வதற்குப் பக்கவாட்டில் ஏனைய பிற சாத்தியக்கூறுகளும் விவாதிக்கப்படுகின்றன. இவற்றில், ஒரு சிறுபான்மை அரசாங்கத்தைச் சகித்துக் கொள்வது மற்றும் சில குறிப்பிட்ட தலைப்புகளில் மட்டும் உடன்பாட்டை எட்டுவதற்கான 'கூட்டுறவு கூட்டணி' (KoKo) என சமீபத்தில் முன்மொழியப்பட்ட ஒன்று ஆகியவை உள்ளடங்கும், இவற்றுடன் பிற முன்முயற்சிகளும் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படலாம்.




மகா கூட்டணி (GROKO), கூட்டுறவு கூட்டணி (KoKo) அல்லது ஒரு சிறுபான்மை அரசாங்கம் ஆகியவற்றின் மீதான விவாதங்களின் நோக்கம், எல்லாவற்றிற்கும் மேலாக, பொதுமக்களிடையே குழப்பத்தை விதைப்பது தான். ஒரு பலமான கூட்டணியிலிருந்துவிலகியவேறெந்த ஏற்பாடும், எதிர்நோக்கப்படும் பரந்த எதிர்ப்பின் முன்னிலையில், அரசு எதிர்கொள்ள வேண்டியிருக்கும் பணிகளைச் செய்ய மிகவும் ஸ்திரமின்றி இருக்கும்என்பதைப்பலவல்லுநர்களும் மற்றும் சான்சிலரும் கூட ஒப்புக் கொள்கிறார்கள். இது இல்லாமல், அனைத்துக் கட்சிகளும் புதிய தேர்தல்களைத் தவிர்க்க வேண்டியதன் அவசியம் மீது உடன்படுகின்றன. ஏனென்றால் திரைக்குப் பின்னால் அவர்கள் தயாரித்துக் கொண்டிருக்கும் வலதுசாரி கொள்கைகள் மீது ஒரு பகிரங்க விவாதத்தை அவை விரும்பவில்லை.

சாத்தியமான அளவுக்கு விரைவாக ஓர் அரசாங்கம் அமைப்பதன் மீது இப்போது அழுத்தம் அதிகரித்து வருகிறது. இதற்குக் காரணம் பிரதானமாக வெளியுறவுக் கொள்கை மீதான பரிசீலனைகள் ஆகும்.

*சர்வதேச சவால்கள் அழுத்தி வருவதால், கிறிஸ்துவ ஜனநாயக ஒன்றியத்தின் தலைவருமான சான்சிலர் அங்கேலா மேர்க்கெல், சமூக ஜனநாயகக் கட்சியுடன் விரைவாக பேச்சுகளைத் தொடங்க திங்களன்று அதற்கு அழைப்புவிடுத்தார். 'நாம் நடவடிக்கை எடுக்கும் வரை, உலகம் நமக்காக காத்திருக் காது' என்றார். ஐரோப்பிய கொள்கை மீது, SPD உடன் 'அதிக அளவில்' பொது உடன் பாடு இருந்தது. ஒரு 'ஸ்திரமான அரசாங்கம்' பிரான்ஸுடனும் ஐரோப்பாவிற்காகவும் பணியாற்ற சிறந்த அடித்தளத்தை வழங்குகிறது என்பதை அவர் சேர்த்துக் கொண்டார்.*

பெரு வணிகங்களுக்கான முன்னணி ஊதுகுழல்களும்,விரைவாக ஓர் அரசாங்கம் அமைக்க அழைப்பு விடுத்து வருகின்றன.



ப்ரூகிங்ஸ் பயிலகத்திலிருந்து Constanze Stelzenmüller, ஒரு தலைமை பாத்திரம் ஏற்க 'ஐரோப்பிய மேலாதிக்கமாக அனுமானிக்கப்படும்' ஜேர்மனிக்கு பைனான்சியல் டைம்ஸில் அழைப்புவிடுத்தார். 'டொனால்ட் ட்ரம்ப் வட கொரியாவுடன் போரை பரிசீலித்து வருகிறார். அதேவேளையில் துருக்கி, ஈரான், ரஷ்யா மற்றும் சீனா ஆகிய அனைத்தும் ஐரோப்பிய கண்டம் உள்ளடங்கலாக மேற்கால் விடப்பட்டுள்ள அதிகார வெற்றிடத்தை சாதகமாக்கி வருகின்றன. ஜேர்மனி மீண்டும் அதன் பலத்தைப் பிரயோகிக்க உத்தேசிக்கும் அறிகுறிகளை ஏனைய ஐரோப்பிய நாடுகள் ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன என ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அவர் தொடர்ந்து கூறினார்.

'கூட்டணிகளின் நன்மை தீமைகளை பேர்லின் தீர்த்துக் கொள்ளும் வரையில், ஐரோப்பிய மற்றும் உலக பிரச்சினைகள் காத்திருக்காது.'

Frankfurter Allgemeine Zeitung (FAZ) கருத்துரைத்தது, 'பல்வேறு உலகளாவிய அபிவிருத்திகளின் காரணமாக, ஜேர்மனிக்கு ஒரு செயல்படும் அரசாங்கம் என்பதற்கும் கூடுதலான ஒன்று அவசரமாகத் தேவைப்படுகிறது. வெளியுறவுக் கொள்கையில், அதனால் எந்த நம்பகமான கடமைப்பாடுகளுக்குள்ளும் இறங்க முடியவில்லை.' இது குறிப்பாக 'பிரிட்டன் வெளியேறியதற்குப் பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்தின் எதிர்கால அபிவிருத்திக்கு' பொருந்துகிறது. பரந்த முடிவுகள் தீர்மானிக்கப்படுவதற்காக காத்திருக்கின்றன என்பதையும் அப்பத்திரிகை சேர்த்துக் கொண்டது.



(கேள்வி தொடரும்...)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. ‘உன்னைச் சரணடைந்தேன்’ என்ற அவரது தொகுப்பில் ‘யாழில் கம்பன்’ பற்றிய தொடர் பதிவு இது.





இசை ஆராதனை 3



# உன்னைச் சரணடைந்தேன்

## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 69

### தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தாக்குதல் போராட்டம் (06.06.1992)

**கிட்டுவின் அஞ்சலிக் கூட்டம்**

கிட்டு கடலில் இறந்த செய்தி வந்திருந்தது. அறிஞர்களையும், கலை இலக்கியவாதிகளையும் ஒருங்கிணைத்து, கலை பண்பாட்டுக் கழகத்தின் சார்பில், புதுவைரத்தினதுரை ஓர் ஊர்வலத்திற்கும், கூட்டத்திற்கும் ஒழுங்கு செய்தார். அடுத்து வரும் நாட்களில் மண்டைதீவினூடு யாழ்ப்பாணத்தினுள், இராணுவம் உட்புகலாம் என்ற சூழ்நிலை அப்போது இருந்தது. அன்றைய கூட்டத்திற்கு, பேராசிரியர் சண்முகதாஸ் தலைமை வகிப்பதாய் இருந்தது. கூட்டம் தொடங்கும் நேரத்தில் அவரைக் காணவில்லை. விசாரித்ததில் அவர் ஏழாலை அம்மன் கோயிலுக்கு, போய் விட்டதாய் தெரிய வந்தது. சூழ்நிலைப் பயத்தால் அக்கூட்டத்தை தவிர்க்கவே, பேராசிரியர் அங்கு போய்விட்டதாய், அனைவரும் பேசிக் கொண்டனர். அப்போது என்னிடம் ஓடி வந்த புதுவை அண்ணை, ‘‘பேராசிரியர் ஏமாற்றி விட்டார். நீங்கள் தான் கூட்டத்திற்குத்தலைமைவகிக்கவேண்டும்’’ என்றார்.

இயக்கம் பல்கலைக்கழகத்தாருடன்நெருங்கி, எங்களைமெல்ல விலத்தத் தொடங்கிய காலமது. கிட்டுவின் ஆளுமையில் எனக்கு மதிப்பு இருந்தது. ஆதலால், சம்மதித்துத் தலைமை தாங்கினேன். கூட்டம் நடந்து கொண்டிருந்த பொழுது, புலிகளின் அரசியல் ஆலோசகர், அன்ரன் பாலசிங்கம் திடீரென அங்கு வருகை தந்தார். அவரைப்பேசஎனமேடையேற்றினார்கள். கலை இலக்கியவாதிகளின் கூட்டத்தில், அவர் பேச வந்ததில் எனக்குப் பெரிய உடன்பாடு இருக்கவில்லை. அவர் மேடை ஏறுகையில், பேசுவதற்காய் மேடையில் அமர்ந்திருந்த மூத்த அறிஞர்கள் எல்லோரும் எழுந்து நின்றனர். தலைவர் அங்ஙனம் எழுந்து நிற்பது மரபுக்கு முரண் என நினைந்து, நான் மற்றவர்கள் போல் எழும்பி நிற்கவில்லை. அன்றைய கூட்டத்தில் பேசிய மற்றவர்களெல்லோரும் அன்ரன் பாலசிங்கத்தை, அரசியல் ஆலோசகர், ராஜதந்திரி என்றெல்லாம் புகழ்ந்து விளிக்க, ‘‘இயக்கத்தின் சார்பாய் அன்ரன் பாலசிங்கம் அடுத்துப் பேசுவார்’’ என, நான், வெறுமையாய் விளித்து அவரை அழைத்தேன். அது பலருக்கும் பிடிக்கவில்லை. இக்கூட்டமும் எங்களின் மீதான இயக்கத்தின் பகை உணர்ச்சிக்கு மற்றும் ஒரு காரணமாயிற்று.

★ ★ ★

**கழகம் நடத்திய பரதநாட்டிய அரங்கேற்றம் (10.10.1992)**

செல்வன் முருகையா அருள் மோகன் என்ற இளைஞன், நாட்டியக் கலையில் வல்லவனாயிருந்தும் அவனது கலையை அரங்கேற்ற முடியாதிருப்பதாக, எங்கள் கழக ஆதரவாளரான, இணுவில் மகாதேவக் குருக்கள் அவர்கள் எமக்கு அறிவித்தார். எங்களை நேசித்த அந்தணப் பெருமக்களில், மகாதேவக்குருக்களும் ஒருவராவார். சிறந்த ரசிகர் அவர்.

எனது குருநாதர் நல்லூரில் பேசிய காலத்திலிருந்து, எங்கள் கம்பன் விழாவை ரசித்து வருபவர். சிறந்த இசைப்பிரியர். அவர்கள் வீட்டுக் கோப்பியும், பலகாரமும் எங்களை ஈர்ப்பன. எப்போது போனாலும் அன்போடு எங்களை உபசரிப்பார். மகாதேவக் குருக்களுடனான அத்தகைய தொடர்பால், அவர் வேண்டுகோளை ஏற்று 1992 ஒக்டோபர் 10 ஆம் திகதி, அம்மாணவனின் அரங்கேற்றத்தை எமது கழகம் யாழ். பல்கலைக் கழககைலாசபதி அரங்கில் நடத்தி வைத்தது. இன்று அவன் எங்கோ வெளிநாட்டில் வாழ்கிறான். கழகத்துடன் இன்று அவனுக்கு எந்தத் தொடர்புமில்லை.

★ ★ ★

**பி.எஸ்.குமாரசாமி நினைவுப் பேருரை - 3 (27.12.1992)**

இந்நிகழ்வும் 1992 டிசெம்பர் 27 ஆம் திகதி கம்பன் கோட்ட மேல்மண்டபத்திலேயே நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு அப்போதைய யாழ். இந்துக் கல்லூரி அதிபர், திரு.பஞ்சலிங்கம் அவர்கள் தலைமை தாங்கினார். திரு. சுந்தரம் டிவகலாலா அவர்கள் உருவப் படத் திரைநீக்கம் செய்து வைத்தார். டாக்டர் கங்காதரன் தொடக்கவுரை நிகழ்த்தினார். ‘ஆளுமையும், ஆசிரிய மருத்துவத் தொழில்களும்’ எனும் பொருளில், பெரும்புலவரான பண்டிதர் க.சச்சிதானந்தன் அவர்கள் இந்நிகழ்வில் நினைவுப்பேருரை ஆற்றினார். அத்தோடு இந்நினைவுப் பேருரை நிகழ்வு நின்று போயிற்று.

★ ★ ★

**மூன்றாவது இசை ஆராதனை (31.01.1993)**

இந்நிகழ்வு 1993 ஜனவரி 31 இல் காலை, மாலை இரு நேர நிகழ்ச்சியாக, யாழ். கம்பன் கோட்ட மேல்மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் மூத்த இசையறிஞர் கே.ஆர். நடராஜாவுக்கு (வால் நடராஜா) ‘இசைப் பேரறிஞர்’ விருதினை வழங்கினோம். யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் துரைராசாவால் இவ்விருது வழங்கப்பட்டது. காலை நிகழ்ச்சிக்கு சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமை தாங்கினார். இம்முறையும் யாழ்ப்பாணத்தின் அனைத்து இசைக் கலைஞர்களும் ஒருமித்துக் கலந்து சிறப்பித்தனர்.

வழமை போலவே நாதஸ்வரக் கலைஞர்களினதும், இசைக் கலைஞர்களினதும் இசையாராதனை காலை நிகழ்ச்சியாக நடைபெற்றது. மதியம் கம்பன் கோட்டத்திற்கு அருகிலிருந்த குமாரதாசனின் வீட்டில் அனைவருக்கும் விருந்திட்டோம். அன்று நான் செய்த தயிர்ச் சாதத்திற்கு கலைஞர்களிடையே ஏக பாராட்டு. மாலை நிகழ்ச்சிக்கு, பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமை தாங்க, சங்கீத பூஷணங்களான, கே.ஆர். நடராஜா, எல். திலகநாயகம் போல், எஸ். பத்மலிங்கம் ஆகியோரது, இசைக் கச்சேரிகள் நடைபெற்றன. இவ்விழாவிற்தான் முதன்முதலாக கஞ்சிரா கலைஞர் நாகராஜனும் மோர்சிங் கலைஞர் எஸ். ராஜாவும் கலந்து கொண்டனர்.

★ ★ ★

(தொடரும்...)




பி.எஸ். குமாரசாமி நினைவுப் பேருரை - 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir



# போதைப்பொருள் வணிகத்தை ஒழிக்க சர்வதேச நிறுவனங்கள் ஒத்துழைப்பு!



கொழும்பு, ஜன. 17

இலங்கையில் போதைப் பொருள் வணிகத்தை ஒழிப்பதற்கு சர்வதேச நிறுவனங்கள் ஒத்துழைப்பு வழங்கு கின்றன என சட்ட ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் பாவனையை இல்லாதொழிப்பதற்கு சர்வதேச நிறுவ னங்களுடன் சேர்ந்து பாடுபடுகிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கட்டு நாயக்கவில் நடைபெற்ற பொலிஸாரின் சுற்றி வளைப்பில் சிக்கிய 928 கிலோ கிராம் கொக்கெய்ன் போதைப்பொருளை நிர்மூலமாக்கும் நடவடிக்கையின் போது அமைச்சர் இவ்வாறு குறிப்பிட் டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 3 ஆண்டுகளில் மேற்கொள் ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் மூலம் பெருமளவு போதைப்பொருள்கள் சிக்கியிருந்தன.

இவற்றின் பெறுமதி 3 ஆயிரத்து 400 கோடியை எட்டுகின்றது. இது போதைப் பொருள் எந்தளவுக்கு தாக்கம் செலுத்துகிறது என்பதைக் காட்டுகிறது என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட் டுள்ளார். (க)

## சுதுமலை ஸ்ரீ முருகன் ஆலயத்தில் பட்டிப்பொங்கல் சிறப்பு வழிபாடு!





யாழ்ப்பாணம், ஜன.17

பட்டிப்பொங்கல் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சுது மலை ஸ்ரீமுருகன் ஆலயத்தில் பட்டிப்பொங்கல் சிறப்பு வழி பாடு நேற்று முன்தினம் மாலை மிகவும் சிறப்பாக நடைபெற் றது.

சூரியனுக்கு நன்றி தெரி விக்கும் தினமான உழவர் திரு நாளாம் தைப்பொங்கல் தினத் திற்கு அடுத்த நாள் உழ வுக்கு துணைபுரியும் கால்நடையான மாடுகளுக்கு பட்டிப் பொங்கல் கொண்டாடுவது தமிழர் மரபு.

பட்டிப்பொங்கல் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் மாலை நாடெங்கிலும் வெகு சிறப்பாகப் பட்டிப்பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

இதனை முன்னிட்டு யாழ்ப் பாணம் சுதுமலை ஸ்ரீ முருகன் ஆலயத்தில் நேற்று முன்தினம் மாலை வெகுசிறப்பாக பட்டிப் பொங்கல் இடம்பெற்றது.

இதில் சுதுமலை மற்றும் இணு வில் பகுதிகளைச் சேர்ந்த 150 இற்கும் அதிகமான மாடுகள் கொண்டுவரப்பட்டு அவற் றிற்கான விசேட வழிபாடுகள் இடம்பெற்றன. வழிபாட்டின் இறுதியில் மாடுகளுக்கான தீவனமும் வழங்கப்பட்டது.

சுதுமலை ஸ்ரீ முருகன் ஆலய இளைஞர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த வழிபாட்டு நிகழ்வில் யாழ் இந்தியத் துணைத்தூதுவர் ஆர்.நடராஜன், செஞ்சொற்செல்வர் ஆறு. திரு முருகன் மற்றும் பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்து கொண டனர். (க)

## விஜேதாச ராஜபக்ஷவின் பாதுகாப்புக் குறைப்பு

கொழும்பு, ஜன. 17

நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் நீதி அமைச்சருமான விஜேதாச ராஜபக்ஷ வின் பாதுகாப்பு அதிகாரிகளின் எண்ணிக்கை இரண்டாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் அவருக்கு அமைச்ச ரவை பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த 6 பாது காவலர்கள் வழங்கப் பட்டிருந்த நிலையில் அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள் ளதனால் அவருக்கு வழங்கப்பட்ட பாது காப்பு குறைக்கப்பட் டுள்ளது.



ஐக்கிய தேசியக் கட் சியின் வேண்டுகோ ளுக்கு அமைய ஜனா திபதி மைத்திரிபால சிறிசேன, கடந்த வரு டம் ஒகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி விஜேதாச ராஜபக்ஷவை புத்தசாசனம் மற்றும் நீதி அமைச்சர் பதவி களில் இருந்து நீக்கியிருந்தார்.

இதனையடுத்து விஜேதாச ராஜபக்ஷ, அரசமைப்புச் சபையில் இருந்து விலகிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க)

# சகல மக்களும் எதிர்பார்க்கும் தீர்வுகள் அனைத்தையும் புதிய அரசமைப்பின் மூலம் விரைவில் பெற்றுக்கொடுப்போம்!

கொழும்பு, ஜன. 17

நாட்டின் சகல மக்களும் எதிர் பார்க்கும் தீர்வுகள் அனைத் தையும் புதிய அரசமைப்பின் மூலமாக பெற்றுக்கொடுக்கவே நான் முயற்சித்து வருகின்றேன்.

சகல அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்புடன் இந்தச் செயற் பாட்டை வெற்றிகொள்வோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் தீர்வு விரைவில் பெற் றுத்தரப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய தைப்பொங்கல் நிகழ்வு நேற்றுமுன்தினம் அலரி மாளி கையில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தைப்பொங்கல்நிகழ்வைதமிழ் மக்களின் முக்கியமான நிகழ் வாக கருதுவதாக முதலில் உரை யாற்றிய சிலர் கூறினர். எனினும் தைப்பொங்கல் நிகழ்வு ஒரு தேசிய விழாவாக நான் கருது கின்றேன்.

தமிழ் மக்களின் இந்த கலா சாரம் நூற்றாண்டு காலமாக பாதுகாக்கப்பட்டு வருகின்றது. மன்னர் ஆட்சியின் போதும் அதன் பின்னரும் தமி ழர் கலா சாரம் பாதுகாக்கப்பட்டு வரு கின்றது.

அதேபோல் சிங்கள், தமிழ் மக் களின் மத்தியில் கூட சில ஒற்று மையான தொடர்புகள் காணப் படுகின்றன. ஆகவே, அதனை முன்னெடுத்துச் செல்ல வேண் டும். மேலும் இந்த நாட்டில் மக் கள் அனைவரும் ஒற்றுமை யாக வாழ வேண்டும்.

எனினும், கடந்த மூன்று தசாப்த யுத்தத்தில் மக்கள் அதிகமாக பாதிக்கப்பட்டனர். குறிப்பாக, வடக்கு, கிழக்கு மக்கள் அதிக மாகப் பாதிக்கப்பட்டனர். எமது நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகா ணங்கள் மிகவும் பெரிய அழி வுகளைச் சந்தித்தன.

இன்று அவற்றை மீளக் கட்டி யெழுப்பி மக்களின் வாழ்வாதா ரத்தை கட்டியெழுப்பும் நடவடிக் கைகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம். அதேபோல், மலையக தமிழ் மக்களின் உரி மைகளையும் நாம் பேணி வரு கின்றோம்.



அலரிமாளிகை பொங்கல் நிகழ்வில் பிரதமர் ரணில்

மேலும், இலங்கையில் காணப்படும் அனைத்துச் சம யங்களும் சமமாகப் பேணப்பட வேண்டும். இதற்கு ஜனாதிபதியும் நானும் அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகின்றோம்.

மேலும், சம்பந்தன் கருத்து ரைக்கும் போது சில விடயங் களை கூறினார். அவற்றை நான் ஏற்றுக்கொள்கின்றேன். மேலும் நாம் தீர்வுகள் வழங்கும் நகர் வுகளை ஆரம்பித்து முன்னெ டுத்துச் செல்கின்றோம்.

அரசமைப்பு விவகாரத்தில் நாம் ஆரம்பித்த சில விடயங்கள் பூரணப்படுத்தப்பட வேண்டும். அரசியல் அமைப்பின் மூலமாக சகல மக்களுக்கும் தீர்வுகளை பெற்றுத்தரும் முயற்சிகளை நாம் முன்னெடுத்து வருகின் றோம். அவை பூர்த்திசெய்யப் பட வேண்டும்.

அரசமைப்பு குறித்து ஆரா யும்குழுக்களை நியமித்து அதன் மூலமாக அறிக்கை தயாரிக்கப் பட்டு இன்று அதனூடாக கட்சி களின் எண்ணங்களை பெற்று ஒரு தீர்வை பெற்றுத்தர பாடுபட்டு வருகின்றேன்.

அவற்றில் வெற்றி கிடைக்கும் என்பது எனது எதிர்பார்ப்பாகும். இது இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஜனநாயக ரீதியாக செயற்படும் முதல் சந்தர்ப்பம் என நான் கருதுகிறேன்.

மத கலாசாரங்களைப் பாது காத்து நாட்டை மீளக்கட்டியெ ழுப்பும் பொறுப்பு எமக்கு உள் ளது. வடக்கு, கிழக்கு பாதிக்கப் பட்டு பொருளாதார ரீதியில் மக்கள் பெரிய நெருக்கடிகளை சந்தித்து வந்தனர்.

ஆகவே, அவற்றைக் கட்டி யெழுப்ப வேண்டும். அதேபோல் அரசியல் தீர்வும் விரைவில் பெற்றுத்தரப்படும். அரசியல்தீர்வு என்பது சகல விடயங்களிலும் இணைந்து செல்லக்கூடியது. கலாசாரம், மதம், இனம் அனைத் தும் இணைந்து செல்லக்கூடிய வையாகும்.

ஆகவே, அவற்றை கருத்திற் கொண்டு வடக்கு, கிழக்கின் பொருளாதாரத்தை இலக்கு வைத்தும் கல்வி, சுகாதாரத்தை இலக்கு வைத்தும் நல்லிணக்க தீர்வுகளை பெற்றுத்தரும் நகர் வுகள் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன. விரைவில் நான் அரசி யல் தீர்வை பெற்றுத் தருவேன் எனவும் அவர் குறிப்பிட்டுள் ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 25ஆம் 26ஆம் 27ம் வினாக்களுக்கு வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

25. 2, 4, 6, 8 ஆகியவற்றுக்கு முறையே A,B,C,D என்னும் எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்கேற்ப

    A B C
   +B A A
   ______ இதற்கு விடையாக அமைவது
   ______

1. CCD    2. ACD    3. DCC

26. | 1 | 4 | 7 |   | 2 | 5 | 8 |   | 3 | 6 | 9 |   ……………….

1. | 6 | 9 | 12 |   2. | 4 | 7 | 10 |   | 4 | 8 | 12 |

27.
4 9 14
9 14 19
14 19 …..


1. 27    2. 24    3. 25

28. A யிற்கும் B யிற்கும் பதிலாக மிகப் பொருத்தமான சொற்சோடியைத் தெரிவு செய்க.

| பழம் | காய்கறி | A |
|---|---|---|
| தோடம்பழம் | வெண்டி | சாமை |
| அன்னாசிப்பழம் | பயற்றை | B |

1. அரிசி, பயறு    2. கோதுமை, தானியம்    3. தானியம், கோதுமை

29. இக்கோலத்தில் C,D ஆகியவற்றுக்குப் பொருத்தமான எண்கள் முறையே யாவை?



1. 4உம் 6உம்
2. 8உம் 2உம்
3. 7உம் 2உம்


30. செவ்வக வடிவமான காணியொன்றின் ஒருபக்க நீளம், அகலம் முறையே 16மீற்றர், 8மீற்றர் ஆகும். அதன் எல்லை வழியே 4மீற்றர் இடைத்தூரங்களில் கம்பித்தூண்கள் நடப்பட்டன. எனின் அக்காணியைச் சுற்றியுள்ள உள்ள கம்பித்தூண்களின் எண்ணிக்கை யாது?

1. 14    2. 12    3. 10

31. பிழையான கோவையைத் தெரிவு செய்க.

1. 8 x 8 – 4 = 60    2. 7 x 7  5 = 54    3. 30 – 0 – 3 = 3

32. இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?



1. 18    2. 16    3. 14





# கல்விக் கதிர் வெளியீடு
## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்


வினாத்தாள்

தரம்-5    பிரபல ஆசிரியர்    பகுதி I    நேரம்- 45 நிமிடம்    5


- 1தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.

- 1ஆம்,2ஆம் வினாக்களில் தரப்பட்ட உருக்களில் ஒரு உரு வேறுபட்டது. வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.

1.



2.



- 3ம் வினாவிற்கு கோலத்திற்கேற்ப வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

3. சிஃபலி, ஃபிசெ, ஜெசிரு, …………………

1. செசிஃபி    2. செசிரு    3. ரிஃசிசி


4. | 100 – 5x6 | தரப்பட்டுள்ள கணிதச் செய்கையில் பெறத்தக்க விடைக்குச் சமனான விடையாக அமைகின்ற கணிதச் செய்கையைத் தெரிவு செய்க.

1. | 5x6 – 3 |   2. | 5x12 + 3 |   3. | 8x5 x3 |

5. 400 இன் அரைவாசியின் ¾ பங்குடன் 10 ஐக் கூட்டும் போது கிடைக்கும் எண் யாது?

1. 160    2. 150    3. 200

- ஒவ்வொன்றும் 4 சதுர சென்ரிமீற்றர் பரப்பளவுள்ள 22 சதுரங்களை அருகிலுள்ள உரு கொண்டுள்ளது.



6. அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு மொத்தப்பரப்பளவின் என்ன பின்னமாகும்?

1. ½    2. ⅔    3. ¾

7. அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு எத்தனை சதுர சென்ரிமீற்றர்?

1. 42    2. 40    3. 44

8. உமது பிறந்த ஆண்டு

1. 19ஆம் நூற்றாண்டின் 1ம் தசாப்தம்
2. 20ஆம் நூற்றாண்டின் 2ம் தசாப்தம்
3. 21ம் நூற்றாண்டின் 1ம் தசாப்தம்

9. உடலில் நிறையம் இருப்பவை

1. மீன்களும் நீரும்    2. அலையும் மீனும்    3. நீரும் உப்புக் கலையும்

10. ஒரு வாக்கியத்தில் நிறையம் இருப்பவை


1. எழுத்துக்களும் சொற்களும்
2. வசனமும் சொற்றொடர்களும்
3. உயிர்க்குறிகளும் நிறுத்தற்குறிகளும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



11. ஒரு வீதியின் மின் கம்பங்களின் மேல் 8 கொடிகள் வீதம் தொங்கவிட்டு அலங்கரிக்கத் தீர்மானிக்கப்பட்டது. வீதியில் 13 மின் கம்பங்கள் இருந்தால், அவற்றினை மேல் தொங்கவிடுவதற்கு எத்தனை கொடிகள் தேவை?
1. 84 கொடிகள் 2. 104 கொடிகள் 3. 96 கொடிகள்


● 12ஆம் 13ஆம் வினாக்களுக்கும் பின்வரும் அடைப்பில் தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி விடை காணத் தெரிவு செய்க.





12.  எத்தனை சமன்?
1. 1200ml 2. 1100ml 3. 1300ml

13. பின்வருவனவற்றில் மிகவும் சரியான தொடர்பு யாது?

1.  2. 


3. 

● ஒரே சதுரமுகியின் பல்வேறு பக்கங்கள் இங்கே காட்டப்பட்டுள்ளன




14. இலக்கம் 6 இற்கு எதிரே இருக்கும் பக்கத்தில் உள்ள இலக்கம் யாது?
1. 4 2. 5 3. 1

● ஒரே சதுரமுகியின் பல்வேறு பக்கங்கள் இங்கே காட்டப்பட்டுள்ளன




15. எழுத்து D யிற்கு எதிரே இருக்கும் பக்கத்தில் உள்ள எழுத்து யாது?
1. A 2. B 3. E


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2 | 8 | 5 | 2 | 8 | 3 | 6 | 5 |
| 4 | 3 | 4 | 2 | 9 | 6 | 3 | 2 |

16. இங்கு அதிக தடவைகள் குறிக்கப்பட்டுள்ள இலக்கம் யாது?
1. 4 2. 2 3. 6



17. நான்கு மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை ஒலிக்கின்ற ஒரு கடிகாரம் உள்ளது. அது மு.ப 6.00 இற்கு ஒலித்தது. அது அடுத்ததாக ஒலிக்கும் இரண்டு சந்தர்ப்பங்களைத் தருக.
1. மு.ப 10.00உம் பி.ப 02.00 உம் 2. மு.ப 12.00உம் பி.ப 04.00 உம்
3. மு.ப 09.00உம் பி.ப 01.00 உம்

● ஒரு சதுரத்தின் ஒரு பக்கத்தின் நீளம் 4m ஆக இருக்குமாறு வரையப்பட்டுள்ள ஒரு பாதை நெய்யரி கீழே காணப்படுகின்றது.





18. மேற்குறித்த பாதை நெய்யரியில் கமலா A யிலிருந்து C யினூடாக D யிற்கும், பாலா D யில் இருந்து F இனூடாக A யிற்கும் பயணம் செய்தனர். இதற்கேற்ப
1. கமலாவும் பாலாவும் ஒரே அளவு தூரத்திற்குப் பயணம் செய்துள்ளனர்.
2. பாலா கமலாவிலும் கூடுதலான தூரத்திற்குப் பயணம் செய்துள்ளார்.
3. இருவரும் பயணம் செய்த மொத்த தூரம் 80மீற்றர் ஆகும்.

19. மேற்குறித்த நெய்யரியில் A யிலிருந்து C யினூடான D வரை மிகக்குறுகிய தூரம்
1. 48m 2. 42m 3. 44m

20. மூன்று மனிதர்கள் 10 நாட்களில் செய்து முடிக்கத் திட்டமிடப்பட்டிருந்த வேலையொன்றை 5 மனிதர்கள் எத்தனை நாட்களில் செய்து முடிப்பர்?
1) 5 நாட்களில் 2) 6 நாட்களில் 3) 8 நாட்களில்

21. கமலன் இந்திரனிலும் உயரம் கூடியவன். விமலன் கமலனிலும் உயரம் குறைந்தவன். இதற்கேற்ப சரியான கூற்று
1. இந்திரனிலும் விமலன் உயரம் கூடியவன்
2. இந்திரன், விமலன் ஆகிய இருவரிலும் உயரம் கூடியவர் யாரெனக் கூறுவதற்கு தரவுகள் போதாது.
3. இந்திரன், விமலன் சமஉயரம் உள்ளவர்கள்




22. இவ்வுருவுடன் தொடர்புபட்ட சரியான கூற்றைத் தெரிவு செய்க.
1. பகுதி A ஆனது சிவப்பு, பச்சை, நீலம் என்னும் மூன்று நிறங்களுக்கும் உரியது
2. பகுதி B,C ஆகிய பகுதிகள் பச்சை நிறமுடையவை.
3. பகுதி D நீலநிறமாக இருக்கும் அதேவேளை பகுதி A சிவப்பு நிறமானது

23. 2016ஆம் ஆண்டு ஓர் நெட்டாண்டாகும். இதன்படி இவ் ஆண்டின் நடுவில் வரும் தினம் யாது?
1. யூன் 30 2. யூலை 01 3. யூலை 02

24. கீழே தரப்பட்டுள்ள அடைப்பில் உள்ள மிகச்சிறிய ஒற்றை எண்ணை மிகப்பெரிய இரட்டை எண்ணால் பெருக்கும் போது கிடைக்கும் விடை யாது?

| | | | |
|---|---|---|---|
| 6 | 5 | 24 | 15 |
| 7 | 20 | 8 | 4 |
| 10 | 18 | 17 | 36 |

1. 100 2. 180 3. 150



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மடகாஸ்கர் 'அவா' புயல் தாக்குதல்

# உயிரிழந்தோர் எண்ணிக்கை 51 ஆக உயர்வு

அன்டனானரிவோ,ஜன.17

மடகாஸ்கரைத் தாக்கிய 'அவா' புயலில் சிக்கி 29 பேர் வரை பலியான நிலையில் தற்போது இந்த எண்ணிக்கை 51 ஆக உயர்ந்துள்ளது.

ஆபிரிக்காவின் தென் கிழக்கே இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள தீவு நாடான மடகாஸ்கரில், கடந்த 5 மற்றும் 6ஆம் திகதிகளில் 'அவா புயல் தாக்கியது. இதனால் மணிக்கு 119 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசியது.



இதில் நாட்டின் கிழக்கு கடற்கரைப் பகுதிகள் கடும் சேதத்துக்கு உள்ளாகின.

இந்தப் புயலில் சிக்கி 29 பேர் வரை பலியாகினர் எனக் கடந்தவாரம் செய்திகள் வெளியாகின. ஆனால், தற்போது இந்தப் பலி எண்ணிக்கை 51 ஆக உயர்ந்துள்ளது. இன்னும் 22 பேரைக் காணவில்லை என அரசு அறிவித்துள்ளது.

அதே சமயம் 54 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேசிய விபத்து மற்றும் பேரிடர் மேலாண்மை துறையினர் மீட்புப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மடகாஸ்கர் தீவு அடிக்கடி புயலால் பாதிக்கப்பட்டு வரும் நிலையில், கடந்த ஆண்டு மார்ச் மாதம் தாக்கிய 'எனாவோ' புயலுக்கு 78 பேர் பலியாகியமை குறிப்பிடத்தக்கது. (ப)



# இந்தியத் தூதரகம் மீது ஆப்கனில் குண்டுத் தாக்கு

காபுல்,ஜன.17

உளவுத்துறை எச்சரித்திருந்த நிலையில் ஆப்கானிஸ்தானில் இந்திய நாட்டுத் தூதரகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபுலில் அமைந்துள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் அமைந்துள்ள பகுதியில் ரொக்கெட் குண்டு விழுந்துள்ளது. இந்திய தூதரகத்தின் மிக அருகே உள்ள வேலியில் இந்தக் குண்டு விழுந்துள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தத் தாக்குதல் தொடர்பாக வெளியுறவுச் செய்தித் தொடர்பாளர் ராவீஷ் குமார் தனது டுவிட்டர் பதிவில், தூதரக கட்டடத்தில் சேதங்கள் இல்லை ரொக்கெட் குண்டு வீசப்பட்டதா என்பதும் உறுதியாக தெரியவில்லை எனப் பதிவிட்டுள்ளார்.

மத்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ் கூறுகையில்-

இந்திய தூதரகம் மீது ரொக்கெட் குண்டு வீசப்பட்டுள்ளது எனவும், இந்தத் தாக்குதலால் இந்திய ஊழியர்கள் யாருக்கும் பாதிப்பும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் தீவிரவாதிகள் 3 பேர் டில்லியில் பதுங்கியுள்ளனர் எனவும், ஜனவரி 26 ஆம் திகதி குடியரசு தினத்தன்று அவர்கள் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளனர் எனவும் உளவுத்துறை ஓரிரு தினங்களுக்கு முன்பு தான் எச்சரித்திருந்தது. அதற்குள் இந்தத் தாக்குதல் நடந்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ப)

# வல்லரசு நாடுகளுக்கு மீண்டும் சவால் விட்டது வடகொரியா!

பியாங்யோங்,ஜன.17

வடகொரிய தலைநகரில் முதன் முறையாக சொந்த நாட்டு தயாரிப்புகளான உற்சாக பானங்கள் மற்றும் உணவுப்பொருள்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

வடகொரிய விமான சேவை நிறுவனமான Air Koroyo குறித்த உணவுப்பொருள்கள் அங்காடிகளை நிர்வகித்து வருகின்றன எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த அங்காடிகளில் முன்னர் இறக்குமதி பொருள்கள் மட்டுமே விற்பனைக்கு வைக்கப்பட்ட நிலையில் திடீர் மாற்றமாக உள்ளூர் தயாரிப்புகள் மட்டுமே விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.



அரச அங்காடிகளில் உள்ளூர் தயாரிப்புகளுக்கு முக்கியத்துவம்

இதனால் இனி சர்வதேச நிறுவனங்களின் உணவுப் பொருள்களின் விற்பனை வடகொரியாவில் படிப்படியாக சரிவடையும் எனவும், இது வடகொரியா மீதான பொருளாதாரத் தடைக்குப் பதிலடியாகவே பார்க்கப்படுகின்றது எனவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

வடகொரியாவில் அரசால் நிர்வகிக்கப்படும் இந்த அங்காடிகளை கடந்த 2010 ஆம் ஆண்டு கிம் ஜாங் உன் திறந்து வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# தலை கீழாகத் தொங்கவிட்டு சித்திரவதை சவுதியின் இளவரசருக்கு நேர்ந்த கதி

ரியாத்,ஜன.17

சவுதி அரேபியாவில் ஊழல் மற்றும் முறைகேடு தொடர்பில் கைதான மிகப்பெரும் பணக்கார இளவரசரை கடும் சித்திரவதைக்கு பின்னர் சிறையில் அடைத்துள்ளனர்.

சவுதியில் ஊழல் மற்றும் முறைகேடு தொடர்பில் கைதான 200 இளவரசர்களில் அல்வலீத் தலாலும் ஒருவர். சவுதியின் மிகப்பெரும் பணக்காரரான இவர் உலகின் மிகப்பெரும் நிறுவனங்களிலும் முதலீடு செய்துள்ளார். கைதான இளவரசர்களிடம் அவர்களின் சொத்து மதிப்புக்கு ஏற்றவாறு ஒரு பெருந்தொகையைச் செலுத்திவிட்டு விடுதலை பெற்றுக்கொள்ளுமாறு சவுதி அரசாங்கம் தெரிவித்துள்ளது. இதனையடுத்து சில இளவரசர்களும் முன்னாள் அமைச்சர்களும் விடுவிக்கப்பட்டனர்.


இந்த நிலையில் இளவரசர் அல்வலீத் தலாலிடம் பட்டத்து இளவரசர் சல்மானின் தலைமையில் இயங்கும் சவுதி அரசாங்கம் இழப்பீடாக 728



மில்லியன் பவுண்ஸ் செலுத்துமாறு உத்தரவிட்டது.

ஆனால், இந்த தொகையைச் செலுத்த இளவரசர் தலால் மறுப்பு தெரிவித்தமையை அடுத்து அவரைத் தலைகீழாகத் தொங்கவிட்டு கடுமையான சித்திரவதைக்கு உள்ளாக்கினர் எனத் தகவல் வெளியாகியுள்ளது. அத்துடன் சவுதியின் உச்சக்கட்ட பாதுகாப்பில் அமைந்திருக்கும் சிறையில் இளவரசர் தலாலை அடைத்துள்ளனர். (ப)

# இந்தோனேஷியாவில் பங்குச் சந்தைக் கட்டட தளம் இடிந்து விழுந்த விபத்தில் 75 பேர் காயம்



ஜகர்த்தா,ஜன.17

இந்தோனேஷியா நாட்டின் பங்கு வர்த்தகச் சந்தை அலுவலக கட்டடத்தின் முதல்தளம் நேற்று இடிந்து விழுந்த விபத்தில் 75 பேர் காயமடைந்தனர்.

இந்தோனேஷியா நாட்டின் சுதிர்மன் மாவட்டத்தில் அந்நாட்டின் பங்கு வர்த்தகச் சந்தை அலுவலகம் இயங்கி வருகிறது. 1995 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இந்தக் கட்டடத்தின் முதல் தளம், இடிந்து கீழ்தளத்தில் உள்ள வரவேற்பறைப் பகுதியின் மீது விழுந்தது.

இடிபாடுகளுக்குள் பலர் சிக்கிக் கொண்டனர். தகவல் அறிந்து விரைந்துவந்த மீட்புப் படையினர் இடிபாடுகளில் இருந்து பலரை மீட்டனர். இந்த விபத்தில் 75 பேர் காயமடைந்துள்ளனர் என உள்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த 2000ஆம் ஆண்டு இதே கட்டட வளாகத்தில் நிகழ்ந்த கார்க்குண்டுத் தாக்குதலில் பத்துப் பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikathir



## புகழ் பெற்ற அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டு:

# முதல்வர், துணைமுதல்வர் கொடியசைத்து ஆரம்பிப்பு

மதுரை,ஜன.17

மதுரை மாவட்டம் அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டை தமிழக முதல்வர் எடப்பாடி கே. பழனிச்சாமி, துணை முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் ஆகியோர் நேற்றுச் செவ்வாய்க்கிழமை கொடியசைத்து ஆரம்பித்து வைத்தனர்.

உலகப் புகழ்பெற்ற அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டு நேற்று நடைபெற்றது. அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டை தமிழக முதல்வர்எடப்பாடிகே.பழனிச்சாமி உறுதிமொழி வாசிக்க மாடுபிடி வீரர்கள் உட்பட அனைவரும் உறுதிமொழி ஏற்றனர். பின்னர் முதல்வர் எடப்பாடி கே. பழனிச்சாமி, துணை முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் ஆகியோர் கொடியசைத்து ஆரம்பித்து வைத்தனர்.

வாடிவாசலில் இருந்து முதல் காளை அவிழ்த்துவிடப்பட்டது. போட்டியில் ஆயிரம் காளைகள், ஆயிரத்து 241 மாடுபிடி வீரர்கள் பங்கேற்றனர். ஜல்லிக்கட்டு போட்டியைக் காண அலங்கா நல்லூரில் ஆயிரக்கணக்கான மக்கள் குவிந்தனர்.



அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டுப்போட்டியில்அதிக காளைகளை அடக்குபவருக்கு கார் பரிசாக வழங்கப்படவுள்ளது. சிறந்த காளையின் உரிமையாளருக்கும் கார் பரிசாக வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

## தனிக்கட்சி பற்றி இன்று தீர்மானம்




சென்னை,ஜன.17

எம்.ஜி.ஆர். பிறந்த நாளான இன்று தனிக்கட்சி தொடங்குவது பற்றி முடிவு செய்வேன் என்று ஆர்.கே. நகர் தொகுதி எம்.எல்.ஏ. தினகரன் கூறினார்.

ஆர்.கே.நகர் தொகுதி எம்.எல்.ஏ. தினகரன் பொங்கல் பண்டிகையையொட்டி புதுச்சேரியில் உள்ள பண்ணை வீட்டுக்குச் சென்றார்.

அங்கு அவரிடம் நிருபர்கள் சந்தித்துப் பேட்டி கண்டனர். அப்போது தினகரன் கூறியவை வருமாறு:-

நான் தனிக்கட்சி தொடங்குவது தொடர்பான முடிவு எம்.ஜி.ஆரின் 101ஆவது பிறந்த நாள் அன்று முடிவு செய்யப்படும். இரட்டை இலைச் சின்னத்தை மீட்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்படும். உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவோம் என்று தெரிவித்துள்ளார். (ப)

# ஜல்லிக்கட்டு இருக்கும் வரை 'ஜெ' இன் புகழும் நிலைக்கும்




மதுரை,ஜன.17

ஜல்லிக்கட்டு இருக்கும் வரை முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் புகழ் இருக்கும் என ஜல்லிக்கட்டுப் போட்டியின்போது துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பேசினார்.

உலகப் புகழ்பெற்ற அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டு விளையாட்டு நேற்று ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. போட்டியை முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். இருவரும் தனி மேடையில் அமர்ந்து போட்டியை ரசித்தனர்.

போட்டியின் இடையே முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி பேசும்போது, ஜல்லிக்கட்டு விளையாட்டை தமிழகத்தின் பாரம்பரிய விளையாட்டாக நாம் கருதுகிறோம். இந்த விளையாட்டில் பங்கேற்கும் காளைகளுக்கு எந்த ஒரு தீங்கும் ஏற்படுவதில்லை. காளைகளை குழந்தைகள் போன்று அதன் உரிமையாளர்கள் வளர்க்கிறார்கள். இந்த வீர விளையாட்டு உலகமே போற்றும் அளவுக்குச் சிறக்க வேண்டும்.- என்றார்.

துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பேசுகையில், தடைகளை உடைத்துச் சட்டப் போராட்டம் நடத்தி ஜல்லிக்கட்டு நடத்தப்படுகின்றது எனக் கூறினார்.

மேலும், ஜல்லிக்கட்டு இருக்கும் வரை ஜெயலலிதாவின் புகழ் இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ப)

## சொகுசுக் கார் வரி ஏய்ப்பு; நடிகை அமலாபால் சரண்

கார் பதிவு மோசடி வழக்கில் விசாரணைக்காக குற்றவியல் நீதிமன்றில் நடிகை அமலா பால் சரணடைந்தார். இவர் சமீபத்தில், ஒரு கோடி மதிப்புள்ள சொகுசு கார் ஒன்றை வாங்கியுள்ளார். இந்தக் காரை கேரளாவில் பதிவுசெய்ய 20 லட்சம் ரூபா வரி கட்ட வேண்டும்.

ஆனால், காரை யூனியன் பிரதேசமான புதுச்சேரியில் பதிவுசெய்தால் குறைந்த வரி கட்டினால் போதும். அமலா பால், தன் காரை ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா செலுத்தி புதுச்சேரியில் வேறு ஒருவர் பெயரில் பதிவுசெய்தார். இதை கேரள வரித்துறை கண்டறிந்தது. இதையடுத்து, அமலா பால் மீது வழக்குப்பதிவு செய்தது. இந்த நிலையில், அமலா பால் நேற்று குற்றவியல் நீதிமன்றம் முன்பு சரணடைந்தார். கைது நடவடிக்கையிலிருந்து தப்பிப்பதற்காக அவர் முன்பிணை வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப)

## சென்னை கடற்பகுதியில் இந்தியா-ஜப்பான் கடற்படையினர் நேற்றுக் கூட்டுப் பயிற்சி



சென்னை,ஜன.17

சென்னையில் மெரினா அருகேயுள்ள கடற்பகுதியில் இந்தியா - ஜப்பான் கடற்படையினர் நேற்று தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளுக்கான கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டனர்.

இந்தியா - ஜப்பான் கடலோரக் காவல் படையினரிடையே இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை கூட் டுப் பயிற்சி நடைபெறுவது வழக்கம். அவ்வகையில் இந்த ஆண்டுக்கான எட்டாவது கூட்டுப் பயிற்சி சென்னையில் மெரினா அருகேயுள்ள கடற்பகுதியில் நடைபெற்றது.

தேசிய அளவில் நடைபெறும் இந்தப் பயிற்சியில் ஜப்பான் கடலோரக் காவல் படை, இந்திய கடலோரக் காவல் படை, இந்திய கப்பற்படை மற்றும் இந்திய விமானப்படைக்குச் சொந்தமான கப்பல்கள் பயிற்சியில் ஈடுபட்டுக் கண்ணைக் கவரும் சாகச நிகழ்ச்சிகளை நடத்தின. இன்றும் இந்தப் பயிற்சி இடம்பெறும் (ப)

# இந்திய ராணுவத் தளபதியின் பேச்சு ஆக்கபூர்வமானது அல்ல

பீஜிங்,ஜன.17

சீனாவுடன்நமக்குடோக்லாம்பிரச்சினை இருக்கின்றது என இந்திய இராணுவத் தளபதியின் பேச்சு ஆக்கபூர்வமானது அல்ல என்று சீன வெளியுறவு அமைச்சகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்திய ராணுவத் தளபதி பிபின் ராவத் அண்மையில் பேசும்போது, மேற்கு எல்லையில் பாகிஸ்தான் மீதும், வடக்கு எல்லையில் சீனா மீதும் நமது இராணுவத்துக்கு மிகுந்த கவனம் தேவைப்படுகிறது. சீனாவுடன் நமக்கு டோக்லாம் பகுதியில் பிரச்சினை உள்ளது என்று குறிப்பிட்டு இருந்தார்.

இதற்குச் சீன வெளியுறவு அமைச்சகம் கண்டனம் தெரிவித்துள்ளது. அந்த அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் லூ காங்க் கூறும்போது, இந்தியத் தளபதியின் கருத்து, கடந்த செப்ரெம்பர் மாதம் பிரிக்ஸ் மாநாட்டில் சீன அதிபர் ஜின் பிங்-பிரதமர் மோடி இடையே எல்லையில் அமைதியைப் பேணுவதற்கு ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலைக்கு எதிரானது. டோக்லாம் பிரச்சினை குறித்து அவர் கூறியிருப்பது, ஆக்கபூர்வமானது அல்ல. இது எல்லையில் அமைதியைப் பராமரிக்க எவ்விதத்திலும் உதவாது. டோக்லாம் என்றைக்குமே சீனாவுக்கு உரிய பகுதிதான் என்றார்.

இந்த நிலையில், இந்தியாவின் வடக்கு பிராந்திய இராணுவத் தளபதி அபய் கிருஷ்ணா, நாங்கள் நன்கு தயார் நிலையில் இருக்கிறோம். டுடிங் (அருணாசலபிரதேசம்) பகுதியில் அண்மையில் சீன ராணுவத்தினர் வந்தனர். அங்கு நமது படைகளும் இருந்தமையால் அவர்கள் தங்களது எல்லைக்குள் மீண்டும் சென்றுவிட்டனர். இதுபோன்ற நடவடிக்கைகளில் இனி சீனா இறங்காது என்றே கருதுகிறேன் என்றும் தெரிவித்துள்ளார். (ப)




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# மோசமாக நடந்த கோஹ்லிக்கு அபராதம்

நடுவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு பந்தை தூக்கியெறிந்த விராட் கோஹ்லிக்கு போட்டியின் 25 வீத ஊதியத்தை அபராதமாக விதித்து ஐ.சி.சி. உத்தரவிட்டுள்ளது.

இந்தியா- தென்னாபிரிக்கா அணிகள் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி தற்போது நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் இரண்டாவது இன்னிங்ஸில் தென்னாபிரிக்கா 2 விக்கெட்டுக்கு 90 ஓட்டங்கள் எடுத்து போது போதிய வெளிச்சமின்மை காரணமாக மூன்றாவது நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

முதலில் மழை குறுக்கீடு காரணமாக போட்டி தாமதமானது, பின் சிறிது நேர ஆட்டத்துக்குப் பின் போதிய வெளிச்சமின்மை என நடுவர்கள் போட்டியை நிறுத்திய நிலையில் விராட் கோஹ்லி களத்தில் இருந்த நடுவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

பின் மூன்றாவது நடுவருடன் பயிற்சியாளர் ரவி சாஸ்திரியுடன் சென்று வாதம் செய்தார், இது எதுவும் பலன் அளிக்காததால் பந்தை வேகமாக தூக்கியெறிந்துவிட்டு கோஹ்லி சென்றுவிட்டார்.

கோஹ்லியின் இந்த மோசமான செயல் தொடர்பாக ஐ.சி.சியிடம் குற்றச்சாட்டு அளிக்கப்பட்டது. இதையடுத்து அவர் மீது நடவடிக்கை எடுத்துள்ள ஐ.சி.சி. போட்டியின் 25 வீத ஊதியத்தை அபராதமாக செலுத்த உத்தரவிட்டுள்ளது.

# U-19 இந்தியா 2 ஆவது வெற்றி

ஜூனியர் உலக கிண்ணக் கிரிக்கெட் தொடரில் பப்புவா நியூகினியாவுக்கு எதிராக 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இந்தியா 2ஆவது வெற்றி பெற்றது.

19 வயதுக்குட்டோருக்கான ஜூனியர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி நியூஸிலாந்தில் நடந்து வருகிறது. இந்தியா தனது முதல் ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி இருந்தது. நேற்று 2ஆவது ஆட்டத்தில் பப்புவா நியூகினியாவுடன் இந்தியா மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்தியா பந்து வீச்சைத் தேர்வு செய்தது. இந்திய இளம் வீரர்களின் அபார பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் பப்புவா நியூகினியா 21.5 ஓவரில் 64 ஓட்டங்களில் சுருண்டது. ராய் 5 விக்கெட்டும், ஷிலம் மாலி 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

அடுத்து விளையாடிய இந்தியா 8 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 67 ஓட்டங்கள் எடுத்து 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. கப்டன் பிரித்வி 39 பந்தில் 59 ஓட்டங்கள் (12 பவுண்டரி) எடுத்தார். இந்தியா பெற்ற 2ஆவது வெற்றி இதுவாகும்.




# பிராட்மன் சாதனையை சமன் செய்தார் கோஹ்லி

தென்னாபிரிக்காவுக்கு எதிராக 153 ஓட்டங்கள் எடுத்ததன் மூலம் கப்டன் பதவியில் டொன் பிராட்மன் சாதனையை விராட் கோஹ்லி சமன் செய்தார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட்டில் இந்திய அணிக் கப்டன் விராட் கோஹ்லியின் ஆட்டம் அபாரமாக இருந்தது. அவர் தனது 21ஆவது சதத்தைப் பதிவு செய்தார்.

217 பந்துகளில் 15 பவுண்டரியுடன் 153 ஓட்டங்கள் குவித்தார். கப்டன் பதவியில் அவர் 8ஆவது முறையாக 150 ஓட்டங்களுக்கு மேல் எடுத்துள்ளார். இதன்மூலம் கிரிக்கெட் சகாப்தமான டொன் பிராட்மன் (ஆஸ்திரேலியா) சாதனையை கோஹ்லி சமன் செய்தார்.

தனது 65ஆவது டெஸ்டில் இதைச் செய்தார். பிராட்மன் ஒட்டு மொத்தமாக 9 முறை 150 ஓட்டங்களுக்கு மேல் எடுத்துள்ளார். கப்டன் பதவியில் 8 முறை எடுத்துள்ளார்.




தென்னாபிரிக்க மண்ணில் சதம் அடித்த 2ஆவது ஆசிய கப்டன் கோஹ்லி ஆவார். இதற்கு முன்பு டெண்டுல்கர் 1997ஆம் ஆண்டு கேப்டவுன் மைதானத்தில் கப்டனாக இருந்தபோது 169 ஓட்டங்கள் குவித்தார். ஒட்டு மொத்தமாக அவர் தென்னாபிரிக்காவில் 5 சதம் அடித்துள்ளார். கோஹ்லி 2 சதம் எடுத்துள்ளார்.

(பு)

# சுதந்திரக் கிண்ணத்தொடர் பங்களாதேஷுக்கு அழைப்பு

இலங்கையில் நடைபெறவுள்ள சுதந்திர வெற்றிக் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுத்தொடரில் கலந்து கொள்ளுமாறு பங்களாதேஷ் கிரிக்கெட் அணிக்கு உத்தியோகபூர்வமாக இலங்கை அழைப்பு விடுத்துள்ளது.

இலங்கை சுதந்திரம் பெற்று 70 ஆண்டுகள் நிறைவடைவதை யிட்டு சுதந்திர வெற்றிக் கிண்ண கிரிக்கெட் சுற்றுத்தொடர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 8 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை இந்த முக்கோண கிரிக்கெட் போட்டித் தொடர் இடம்பெறவுள்ளது.

இப் போட்டித் தொடரில் பங்களா தேஷ், இலங்கை, இந்தியா ஆகிய அணிகள் பங்கேற்கின்றன.

இருபதுக்கு - 20 போட்டிகள் யாவும் கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# செஞ்சூரியன் டெஸ்ட் பரபரப்பான கட்டத்தில்!



இந்தியா - தென்னாபிரிக்கா இடையிலான 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் செஞ்சூரியனில் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் 3ஆவது நாள் ஆட்டத்தில் தென்னாபிரிக்கா 2ஆவது இன்னிங்ஸில் 2 விக்கெட் இழப்பிற்கு 90 ஓட்டங்கள் எடுத்திருந்தது. டி வில்லியர்ஸ் 50ஓட்டங்களுடனும், டீன் எல்கர் 36 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று 4ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது. இருவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். டீன் எல்கர் அரைச் சதம் அடித்தார். டி வில்லியர்ஸ் 80 ஓட்டங்கள் எடுத்த நிலையில் மொகமது ஷமி பந்தில் ஆட்டமிழந்தார். டீன் எல்கர் 61 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். டி கொக் 12 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இந்த மூன்று விக்கெட்டுக்களையும் மொகமது ஷமி வீழ்த்தினார்.

5ஆவது விக்கெட்டுக்கு டு பிளிசிஸ் உடன் பிலாண்டர் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி மதிய உணவு இடைவேளை வரை விக்கெட் இழக்காமல் பார்த்துக் கொண்டனர்.

எனினும் பின்னர், தென்னாபிரிக்க அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 258 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அதைத் தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸில் 287 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பாட்டம் தொடங்கிய இந்தியா, நேற்று பின்மாலைப் பொழுது வேளையில் 23 ஓவர்களில் 35 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்தது.

இன்று ஆட்டத்தின் இறுதிநாள். தன் கைவசம் எஞ்சியுள்ள ஏழு விக்கெட்டுக்களை வைத்துக் கொண்டு மிச்சமாகத் தேவைப்படும் 252 ஓட்டங்களைப் பெற்று இந்தியா வெல்லுமா? அல்லது இந்தியாவை அந்த ஓட்டங்களுக்குள் சுருட்டி தென்னாபிரிக்கா வெற்றியீட்டுமா? அல்லது ஆட்டம் எத்தரப்புக்கும் வெற்றி தீர்மானிக்கப்பட முடியாத நிலையில் 'ட்ரா' வில் முடியுமா என்பது இன்று இலங்கை நேரப்படி முன்னிரவிற்கு முன் தெரியவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.தே.கவுக்குக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வருகின்றனர் என மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) தெரிவித்துள்ளது.

மேலும், தங்களது ஊழல் மோசடிகளை மறைத்துத் தப்பித்துக் கொள்வதற்காக புதிய அரசமைப்பைவைத்துமஹிந்த கும்பல்தெற்கில் இனவாதத்தை பரப்புவதாகவும், தமிழ்மக்களது பிரச்சினைகளைத் தாம் தீர்க்காது இருந்தமையை மூடி மறைப்பதற்காக புதிய அரசமைப்புபற்றிவடக்கில்கூட்டமைப்பினர் பேசுகின்றனர் எனவும் ஜே.வி.பியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பிமல் ரத்நாயக்கா தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியின் யாழ். அலுவலகத்தில் நேற்றுத் தாம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயேமேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் முதற் தடவையாக வடக்கில் நாம் போட்டியிடுகின்றோம். வடக்கு மக்களின் பிரச்சினைகள்குறித்துபேசுகின்றதரப்பினர்கள் இங்கு இல்லை. இங்கிருக்கின்ற தரப்பினர்கள் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பேசுகின்றார்களில்லை. அதனால் தான்நாம்போட்டியிடுகின்றோம்.

அவர்கள் தமது தேவைகள் பற்றியே நாடாளுமன்றத்திலும் பேசுகின்றனர். அது மட்டுமல்லாமல், தமது தேவைகளைப் பேசி அவற்றைப் பெற்றும் கொள்கின்றனர். இதனால் வடக்குமக்களின்குரலாக ஒலிப்பதற்கு நாம் முன்வந்திருக்கின்றோம்.

இங்குள்ள மக்கள் வாக்களித்துநாடாளுமன்றம்அனுப்பிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்கள் பிரச்சினைகள் பற்றிப் பேசுகின்றார்களில்லை. அதே போன்று மாகாண சபையிலும் அவர்கள் மக்கள் நலன்சார் திட்டங்களை முன்னெடுக்கின்றார்களில்லை. இவ்வாறு அனைவரும் மக்கள் பிரச்சினைகளுக்குக் குரல் கொடுக்காதவர்களாகவே இருக்கின்றனர்.

இவ்வாறான நிலைமையில் கூட்டமைப்பினர் எம்மைப் பார்த்து சிங்களக் கட்சி என்றும் எமக்கு வாக்களிக்க வேண்டாம் என்றும் தமிழ் மக்களிடம் கூறுகின்றனர். அவ்வாறு கூறுகின்ற கூட்டமைப்பினர்தமிழ்மக்களுக்குத் துரோகமான அனைத்து நடவடிக்கைகளுக்கும்நாடாளுமன்றத்தில் கை தூக்குகின்றவர்களாகவும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு காவடி எடுக்கின்றவர்களாகவுமே இருக்கின்றனர். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியிடம்தமிழ்மக்களைவிற்கின்ற கூட்டமைப்பினர் எம்மைப் பார்த்து சிங்களக் கட்சி என்று கூறுகின்றமை ஆச்சரியத்திற்குரியது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவிற்கு விற்பதற்கு மைத்திரி – ரணில் அரசுக்கு கூட்டமைப்பினர் ஆதரவு வழங்குகின்றனர். இந்தநாட்டின் வளங்களை வேறு நாட்டுக்கு கொடுப்பதால் அல்லது இந்த அரசுக்குஆதரவுவழங்குவதால் இவர்களுக்கு என்ன நன்மை கிடைக்கின்றது? இதனூடாக அவர்கள் எதனைச் சாதிக்க முடியுமென்று நினைக்கின்றனர்?

இதேவேளை தங்கள் ஊழல் மோசடிகளை மூடி மறைப்பதற்காகபுதியஅரசமைப்பின்ஊடாக நாடுபிரிபடப்போகின்றதுஎன்று மஹிந்த ராஜபக்ஷ கும்பல் சிங்களமக்கள்மத்தியில்இனவாதம் பரப்புகின்றனர். அங்குராஜபக்ஷ கும்பல் போன்று இங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்களது பிரச்சினைகளைத் தீர்க்காது இருந்துவிட்டு தற்போது தேர்தல் வந்துள்ள நிலையில் அதனை மூடி மறைப்பதற்காக புதிய அரசமைப்புப் பற்றி பேசுகின்றார்கள்.

இதனால்தான் மக்களின் குரல், மக்களுக்கான குரல், வடக்கில் தேவைப்படுகின்றதென்று நாம் கூறுகின்றோம்.

இன்றுதெற்குக்குமட்டுமல்ல, வடக்கில் வாழும் மக்களின் குரலாகவும் எமது குரல் நாடாளுமன்றத்திலும் ஒலித்துக் கொண்டிருக்கையில், இங்கும் அதே பிரதிநிதித்துவம் வேண்டுமென்று கேட்கின்றோம்.

அண்மையில் வெளிவந்திருக்கின்ற காணி அறிக்கையொன்றில்மன்னாரில்அமைச்சர் ரிஷாத் பதியுதீன் பாரியளவிலான மோசடிகளைச் செய்திருக்கின்றார் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அந்த அறிக்கை குறித்தோ அமைச்சரின்மோசடிகுறித்தோ கூட்டமைப்பினர் இதுவரையில் குரல் கொடுக்கவில்லை. – என்றார் அவர்.

## கலைப்பீட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கம் அறிவித்துள்ளது. அவர்களுக்கான அனைத்து விரிவுரைகள் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகுமென நிர்வாகம் மேலும் தெரிவித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை மூன்றாம், நான்காம் வருட மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக அவர்களுக்கு மறு அறிவித்தல் வரையில் வளாகத்தினுள் நுழைவதற்குக் கலைப்பீடாதிபதியால்தற்காலிக தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) துள்ளார்.

சீனாவின்உதவியைப்பெறும் அபிவிருத்திஅடைந்தநாடுகள் எதிர்காலகடன்நெருக்கடிகளுக்குத் தளம் அமைத்துக் கொள்கின்றன.

சீனாவின்தற்போதையகடன் வழங்கும் போக்குத் தொடருமானால், சில அபிவிருத்தி அடையும் நாடுகள் பொருத்தமற்ற கடன்சுமைக்குள் தள்ளப்பட நேரிடும்.

சில நாடுகள், மொத்த உள்நாட்டுஉற்பத்தியில்25,30 வீதம் வரை சீனாவிடம் கடன் பெற்றுள்ளன.

இலங்கைக்கு ஏற்பட்ட நிலை மற்றைய நாடுகளுக்கான முன்னெச்சரிக்கையாகும்.

சீனாவின் கடன்பொறியில் சிக்கிய இலங்கை, சீனாவின் உதவியுடன் கட்டப்பட்ட சொத்துக்களை அந்த நாட்டுக்கே விற்கவேண்டியநிலைக்குத்தள்ளப்பட்டுள்ளது.

கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல்துறைமுகம், விமான நிலையத்தை விற்க வேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஆபிரிக்க நாடுகளை சீனா கடன்பொறிக்குள்தள்ளுவதாகசுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை சீன வெளிவிவகார அமைச்சர் வாங்யி நிராகரித்துள்ளார்.

அங்கோலாவின் தலைநகர் லுவாண்டாவில் செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் பேசும் போதே அவர் இந்தக் குற்றச்சாட்டுகள் பொய்யானவைஎன்றுகூறியுள்ளார்.

## அமைச்சரவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

பிணைமுறிவிவகாரம்தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை ஜனாதிபதி சிறிசேன வெளியிட்டமையை அடுத்து சுதந்திரக் கட்சித் தலைவரான அவருக்கும் ஐ.தே.கவினருக்கும் இடையில் மிக மோசமான முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன என்று செய்திகள் வெளியாகியமை தெரிந்ததே.

அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ, சுஜீவ சேனசிங்க, எம்.பி. மரிக்கார் போன்றோர் ஜனாதிபதியை மோசமாக விமர்சித்து வந்தனர்.

இந்தவிடயம்நேற்று அமைச்சரவைக் கூட்டத்திலும் எதிரொலித்தது.

ஜனாதிபதி பதவிக்கு உரிய மரியாதை அளிக்கப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார் எனத் தெரிகின்றது.

ஆனால், ஜனாதிபதியும்பொது மேடையில் சூசமாகப் பிரதமரைச் சுட்டிக்காட்டி மோசமாக விமர்சித்துள்ளார் என ஐ.தே.கவினர் ஜனாதிபதி மீதும் விமர்சனத்தை முன்வைத்தனர்.

சு.கவினர் பிரதமரையும், ஐ.தே.கவினரையும் மோசமாக விமர்சித்து வருகையில் அரசியல் ரீதியாகப் பதிலுக்கு ஜனாதிபதி மீதும் விமர்சனம் வருவது தவிர்க்க முடியாதது என்று ஐ.தே.கவினர் குறிப்பிட்டனர்.

இந்த விவாதம் மோசமான கட்டத்தை அடைந்த போதே ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டத்திலிருந்து விடுவிடுவென எழுந்து வெளியேறினார்.

தமது அலுவலக அறைக்குள் போய் அமர்ந்து கொண்டார்.

அதையடுத்து, ஐ.தே.க. அமைச்சர் மலிக் சமரவிக்கிரம ஜனாதிபதியைச் சமாளிக்க அவரது அறைக்குச் சென்றார்.

தொடர்ந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மஹிந்த சமரசிங்க, கபிர் காஸிம், அகிலவிராஜ் காரியவசம், சஜித் பிரேமதாஸ, துமிந்த திஸநாயக்கா ஆகியோரும் அங்கு சென்றனர்.

முதலில் சென்ற மலிக் சமரவிக்கிரம நீண்ட நேரம் ஜனாதிபதியுடன் உரையாடி அவரைச் சமாளிக்க முயன்றார் எனக் கூறப்பட்டது.

சற்று நேரத்தின் பின்னர் ஏனைய அமைச்சர்கள் உள்நுழைந்த போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மலிக் சமரவிக்கிரமவின் கைகளைப் பற்றியபடி உணர்ச்சி வசப்பட்டவராக – அழாக் குறையாக – மனதில் இருந்தவற்றை அவரிடம் கொட்டிக் கொண்டிருந்தமையை ஏனைய அமைச்சர்கள் கண்டனர் என்றும் கூறப்பட்டது.

இதையடுத்து, இரு பக்கத்தினரும் மனம் விட்டுப் பேசினர். இரு கட்சியினரும் ஒரு கட்சியினரை மற்றத் தரப்பினர் பொது வெளியில்விமர்சிக்கின்றமையை உடனடியாக நிறுத்துவது என்ற இணக்கத்துக்கு வந்தனர் என்றும் –

அதையடுத்து அமைச்சரவைக் கூட்டத்துக்கு ஜனாதிபதி திரும்பினார் என்றும் – தெரிவிக்கப்பட்டது.

சற்று நேரம் இருந்து அமைச்சரவைக் கூட்டத்தை நடத்திய ஜனாதிபதி சிறிசேன அத்துடன் கூட்டத்தை நிறைவு செய்து முடித்தும் வைத்தார். (உ)

## வரதராஜப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பாணத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

யாழ் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நேற்றுக் காலை 10.30 மணியளவில் அக்கட்சியின் தலைவர் சிறிதரன் தலைமையில் நடைபெற்ற வெளியீட்டு நிகழ்வில் வரதராஜப்பெருமாளினால் விஞ்ஞாபனம் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது.

இந் நிகழ்வில் கட்சியின் முக்கியஸ்தர்களும் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## ‘மிக்’...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முன்தினம் நடந்தஐ.தே.க.வின் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இத்னைக் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரேனில் இருந்து முன்னைய அரசாங்கம் மிக் போர் விமானங்களை தலா ஒவ்வொன்றும் 7.2 மில்லியன் டொலருக்கு கொள்வனவு செய்திருந்தது. எனினும், அதிகாரபூர்வ ஆவணங்களில் 14.7 மில்லியன் டொலருக்கு அவை கொள்வனவு செய்யப்பட்டன எனக் கூறப்பட்டுள்ளது.

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ 7.5 மில்லியன் டொலரை எடுத்து, ஹொங்கொங் வங்கி ஒன்றில் வைப்பிட்டுள்ளார்.

மிக் போர் விமானக் கொள்வனவு மோசடி தொடர்பான விவரங்களை மறைந்த ஊடகவியலாளர் லஸந்த விக்கிரமதுங்க அம்பலப்படுத்தினார். இதுபற்றிய விவரங்கள் இப்போது, சட்டமா அதிபரிடம் உள்ளன.

மஹிந்தராஜபக்ஷகுடும்பத்தினருக்குஎதிரானவழக்குகளைத் துரிதப்படுத்துமாறு அரசாங்கம் கேட்டுள்ளது.

எனினும், முன்னாள் நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவின்தலையீட்டினால் சில வழக்குகளில் தாமதம் ஏற்பட்டது.

நீதிஅமைச்சராக இருந்த போது, அவர் மஹிந்த ராஜபக்ஷவுடன்இரகசியதொடர்புகளை வைத்திருந்துள்ளார்.

இப்போதுபுதியநீதிஅமைச்சர் வழக்குகளைத் துரிதப்படுத்துவார். இதன் மூலம், ராஜபக்ஷ குடும்பம் 2020இல் வெளிக்கடைக்குச் செல்லும் – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சேர்ந்திருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி எங்களுக்கு எதிராகச் செயற்படுபவர்களைத் தடுப்பதுதான் கஷ்டம்.

–இவ்வாறு பெரும் விசனத்துடன் தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

நேற்று மாலை தமிழ் மக்கள் பேரவையின்ஏற்பாட்டில்யாழ்ப்பாணம்வீரசிங்கம்மண்டபத்தில் நடைபெற்றகருத்தமர்வுமற்றும் கலந்துரையாடலில் கலந்துகொண்டுஉரையாற்றும்போதே இவ்வாறு விசனத்துடன் குறிப்பிட்டார் அவர்.

பெரும் எண்ணிக்கையான மக்கள் பங்களிப்புடன் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்று முடிந்தது.

நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனின் தலைமையுரையுடன் கருத்தமர்வு ஆரம்பித்தது.

தொடர்ந்து “வடக்கு – கிழக்கு தமிழர்தம்உரிமைகளின்கேடயமாக சர்வதேச சட்டம்” எனும் தலைப்பில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகச் சட்டத்துறை பேராசிரியர் முத்துக்குமாரசாமி சொர்ணராஜா உரையாற்றினார்.

அதன் பின்னர் ‘இடைக்கால அறிக்கை–மாயைகளைக்கட்டுடைத்தல்’ என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் குமாரவடிவேல் குருபரன் உரையாற்றினார். இதன் பின்னர் முதலமைச்சர் தொகுப்புரை ஆற்றினார். அத்தோடு கேள்வி – பதில்கள் வழங்கும் கலந்துரையாடலும் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், வட மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் மற்றும் மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் உள்ளிட்ட அரசியல்பிரமுகர்கள்கலந்துகொண்டனர்.

மேலும் மதத் தலைவர்கள், கட்சிகளினதும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் தமிழ்மக்கள்பேரவையின்பிரதிநிதிகள், பொதுமக்கள் என வீரசிங்கம் மண்டபம் நிறைந்திருந்தது.

அங்கு உரையாற்றுகையில் முதலமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:–

அரசாங்கம் தருவதைப் பெற்றுக் கொள்வதை விடுத்து, எங்களுக்குஎன்னதேவையோஅதனைக்கோரிஅதையேபெற்றுக் கொள்ள வேண்டும். அரசு தருவதைப் பெற்றுக் கொள்வதால் எங்களுக்கு ஒரு நன்மையும் ஏற்படாது. நாம்ஏற்காதஅல்லது விரும்பாத தீர்வொன்றை எம் மீதுதிணிக்கமுடியாது. அவ்வாறு திணிக்கமுற்பட்டால்மக்களுக்கு அதனைஎடுத்துக்கூறிநாங்கள் அதனை எதிர்ப்போம்.

இந்நிலையில், எங்களுக்கு எதிரானவர்களை இலகுவில் தடுத்தாலும், எங்களோடு இருந்து எங்களுக்கு எதிராகச் செயற்படுகின்றவர்களைத்தடுப்பது தான் கஷ்டம்.

இத்தகைய கலந்துரையாடல் செயற்பாடுகளை கிராம மட்டங்களிலும் மாவட்ட ரீதியாகவும் தொடர்ச்சியாக முன்னெடுக்க இருக்கின்றோம். அதுபோன்று, கிழக்கு மாகாணத்திற்கும் கொண்டு செல்லத் திட்டமிட்டுள்ளோம்.

இடைக்கால அறிக்கையால் பயனில்லைஎன்பதால்அதனை அம்பலப்படுத்துவதைத்தான் இப்போதும் செய்து கொண்டு இருக்கின்றோம். அந்தஅறிக்கை எப்படியானது என்பதைத் தெளிவுபடுத்துவோம். அதனை ஏற்க வேண்டுமென்று ஓரிருவர் கொழும்பில் இருந்து கொண்டு கூறுவது அல்ல முக்கியம். இங்கு மக்களுக்கு என்ன தேவை, மக்களின்மனோநிலை எப்படியானதாக இருக்கின்றது என்பதைப்பார்த்தேஅதற்கேற்ற வகையில் செயற்படவேண்டும்.

ஆனால்அந்தஅறிக்கையில் ஏதுமே இல்லை. அது, பயனற்றது என்று நாம் கூறினால் அதற்கு அரசாங்கம் தருவதையும் நாம் தடுக்கிறோம் என ஒரு விமர்சனமும் முன் வைக்கப்படுகின்றது. ஆனால் தருமாறு வேண்டியதை அல்லது நாம் கேட்கின்றதைத் தானே தர வேண்டும்? அவ்வாறு நாம் கோரியதைத் தந்தால்தானே நன்மை!

பக்கம் 19 »

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சேர்ந்திருந்து...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனை விடுத்து அரசாங்கம் தருவதைப் பெற்றுக் கொள்வதால் எந்த நன்மையும் கிடையாது. அவ்வாறு அரசு தருவதைப் பெற்றுக் கொண்டால் தமிழ் மக்கள் வடக்கு, கிழக்கில் குறைவாக வருவதுடன் தமிழர்களின் பிரதிநிதித்துவமும் குறைந்து ஏனையவர் களது பிரதிநிதித்துவமே அதிகரிக்கும்.

ஆகவே, அரசு தருவதைத் தான் ஏற்றுக் கொள்வது என்றால் அது எமக்குப் பின்னடைவையே ஏற்படுத்தும். அது பின்னாளில் எமக்குப் பாரிய பின்னடைவுகளையும் கஷ்டங்களையுமே ஏற்படுத்தும்.

இடைக்கால அறிக்கையில் நாம் கேட்பது இல்லை என்ற அடிப்படையில் அதனை நாங்கள் எதிர்க்கின்றபோது எங்களுக்கு ஒரு பிரச்சினை இருக்கின்றது. அது என்னவெனில், எங்களுக்கு எதிரானவர்களை எதிர்ப்பது சுலபம். ஆனால் எங்களோடு இருப்பவர்களைத் தடுப்பது கஷ்டம்.

ஜெனிவா அமர்வு குறித்து எங்களது அமைச்சர் ஒருவர் ஒவ்வொரு வருடமும் சென்று வருகின்ற நிலையில் நானும் அங்கு செல்ல வேண்டிய தேவை என்றால் அதனை அந்த நேரத்தில் பார்த்துக் கொள்வோம்.

தமிழ் மக்கள் பேரவை ஒரு மக்கள் இயக்கம். நாம் பெற்ற அறிவை அனைவருடனும் பகிர்ந்துகொள்ளவேண்டும் என்ற எண்ணத்தில் கூட்டங்கள் கூட்டி எமது மக்களுக்கு புரிந்துணர்வையும் அரசியல் அறிவையும் புகட்ட துறைசார் நிபுணர்களை வேண்டி நின்றோம்.

மக்களுக்கு எடுத்துக்கூறும் கூட்டத் தொடரின் அங்குரார்ப்பணக் கூட்டம் நேற்று நடைபெறுகிறது. இவ்வாறான தெளிவுபடுத்தும் கூட்டங்கள் வடகிழக்கு மண்ணில் காலத்திற்குக் காலம் இனித் தொடர்ந்து நடப்பன. எமது பொதுமக்களின் அரசியல் அறிவை வளர்ப்பதே எமது குறிக்கோள். இதில் கட்சி அரசியல் எதுவும் இல்லை. சிலர் தங்கள் கட்சிகள் பற்றியும் அதில் தமது எதிர்காலப் பங்கு பற்றியும் சதா சிந்தித்துக் கொண்டிருக்கின்றமையால் எங்களையும் கட்சி ஆர்வம் கொண்டவர்கள் என்று அடையாளப்படுத்தி நாமும் கட்சிரீதியாக நலம்பெறப் பார்க்கின்றோம் என்று எமக்கெதிராகச் சில நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார்கள். தேர்தல் காலத்தில் இவ்வாறான கூட்டங்களை நடத்தலாமா என்றுகேட்கின்றார்கள். தேர்தல் காலத்தில் புதிய அரசியல் யாப்புப் பற்றியோ, அது சம்பந்தமான இடைக்கால அறிக்கை பற்றியோ, ஐக்கிய நாடுகள் பிரேரணை பற்றியோ சட்டப் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் விரிவுரை நடத்தலாகாதுஎன்றுதேர்தல் ஆணையாளர் விதிகள் விதித்தார் என எமக்குத் தெரியப்படுத்தப்படவில்லை. எமது இந்தக் கூட்டமும் இவ்வாறான கருத்துரைகளைப் பகிர்ந்துகொள்ளும் கூட்டமே. மக்களுக்கு அரசியல் அறிவுபுகட்டும் கருத்துரைகளே இங்கு வெளியிடப்படவிருக்கின்றன.

ஒருவேளை மக்கள் எங்களுக்கு அரசியல் அறிவைப் புகட்டக்கூடிய சந்தர்ப்பங்களும் எழலாம். மக்களிடம் இருந்தும் நாம் அரசியல் ரீதியாக அறிய வேண்டியவை பல இருக்கலாம்.

எனினும், எந்தத் தேர்தல் கட்சி பற்றியோ, அவற்றின் கொள்கைகள் பற்றியோ, செயற்பாடுகள் பற்றியோ விமர்சிப்பதற்காக நாங்கள் இங்கு கூடவில்லை. உண்மையைவிளங்கிக் கொள்ளக்கூடியுள்ளோம். உரிமைகள் கிடைக்குமா? என்று உறவாட உள்ளிட்டுள்ளோம். ஆகவே இவ்வாறான கூட்டங்களைத் தடுக்க நினைப்பது மக்கள் அறிவு பெறுவதைத் தடுப்பதாகவே கொள்ளவேண்டும்.

நாம் பெப்ரவரி மாதம் 10ஆம் திகதிய தேர்தலை முன்னிட்டு வாய்பொத்திகை அடக்கி நிற்க வேண்டும் என்று நினைப்பது இரக்கமற்ற செயல். மார்ச் மாதத்தில் இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகளுக்கு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும். தேர்தல் முடிந்ததும் இடைக்கால அறிக்கைபற்றி நடவடிக்கை எடுக்க இருப்பதாகக் கூறப்படுகிறது. அவைபற்றிப் பேசினால் தேர்தலைப் பாதிக்கும் என்று எண்ணுவது மடமையாகும். அவை பற்றி மக்கள் அறிந்திருப்பது அவசியம். நாம் மக்கள் அறிவையும் புரிந்துணர்வையும் அகல விரிக்கவே இந்த அப்பியாசத்தில் ஈடுபட்டுள்ளோம். அவ்வாறான புரிந்துணர்வு இன்றையகால கட்டத்தில் அவசரமாகத்தேவையாக இருக்கின்றது என்பது எமது கருத்து. நாங்கள் எந்தக் கட்சியையும் பிரதிநிதித்துவப்படுத்துபவர் அல்லர். எமது மக்களுக்கு எடுத்துக் கூறும் கூட்டத் தொடரில் முதல் கூட்டத்தை இத்தால் அங்குரார்ப்பணம் செய்துவைப்பதில் மகிழ்வடைகின்றேன்.

இன்று இரு சிறந்த சட்டப் பேச்சாளர்களின் கருத்துக்களைச் செவிமடுத்துள்ளீர்கள். இரு முக்கியமான விடயங்கள் பற்றி ஆராய்ந்துள்ளோம். ஒன்று – இலங்கையின் பெரும்பான்மையினரின் பக்கச் சார்பான தொடர் நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்களுக்கு சர்வதேசச் சட்டம் எந்த அளவுக்கு நன்மை புரிகின்றது, அதனை முன் வைத்து எவ்வாறு நாம் எமது இழந்த உரிமைகளைப் பெற முடியும் என்பது பற்றியது.

அடுத்தது – இடைக்கால வரைவுகள் பற்றியது. இடைக்கால வரைவுகள் பற்றி சிலர் கூறித்திரிவது உண்மையா அல்லது உண்மை வேறா என்பதை ஆராய்ந்துள்ளோம்.

அவர்கள் கூறிய சில விடயங்களை மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன். அந்த விதத்தில் எம்முள் பலர் ஒத்த கருத்தையே உடையோம் என்பதில் மகிழ்வடைகின்றேன்.

### சர்வதேசச் சட்டங்கள்

அண்மைக்காலங்களில் பல முக்கிய மாற்றங்கள் சர்வதேசச் சட்டத்தில் ஏற்பட்டுள்ளன. பல நாடுகளில் ஏற்பட்ட நெருக்கடிகள், அவற்றினால் உலகமக்கள்மனதில் ஏற்பட்டதாக்கங்கள் போன்றவை இந்த மாற்றத்திற்குக் காரணம் ஆகிவிட்டன. 1983ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் எமது அப்போதைய பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோன் அவர்கள் மத்திய கிழக்கு நாடொன்றில் இருந்தார். அம்மாதம் 23ஆம் திகதிக்குப் பின்வந்த நாள்களில் இலங்கையில் நடைபெற்ற கொடூரமான நிகழ்வுகள் தொலைக்காட்சி ஊடாக ஒளிபரப்பப்பட்டு வந்தன. அது பற்றி அவர் பின்னர் என்னிடம் கூறிய போது 'எமது நாடு அந்தக் கால கட்டத்தில் நாறியது' என்றார். 'வெட்கப்படுகின்றேன்' என்றார். அவ்வாறு நாடுகளில் நடந்தவற்றைப் பார்த்த சட்ட வல்லுநர்கள் பலர், சர்வதேசச் சட்டத்தை விரிவாக்க வேண்டும் என்று எண்ணிய காரணத்தாலேயே சர்வதேசச் சட்டம் இப்போது விரிவடைந்த நிலையில் உள்ளது. இதன் பிரதிபலிப்பே உலகக் குற்றவியல் நீதிமன்ற ஏற்பாடு. அதுமட்டுமல்ல, நிலைமாற்றத்தின் போது பாதிப்புக்குள்ளான நாடுகள் எடுக்க வேண்டியநடவடிக்கைகள் பற்றி இப்பொழுது வலுவான கருத்துக்கள் தோன்றியுள்ளன.

நிலைமாற்றம் என்றால் என்ன? ஒரு நாட்டின் அரசியல் நிலையில், யதார்த்த நிலையில் மாற்றம் ஏற்படுவதையே அது குறிக்கின்றது. ஓர் இருண்ட காலத்தினுள் இருந்து வெளிச்சத்தை நோக்கி எட்டிப்பார்ப்பதையே நிலைமாற்றம் குறிக்கின்றது. எனவே நிலைமாறும் நாடுகள் நீதிக்குகந்ததாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளே நிலைமாற்றநீதிமுறைகள் ஆவன. இதையே Transitional Justice என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். கஷ்டநிலையில் இருந்து ஒரு நாடு மீண்டு வரும்போது என்னென்ன நடவடிக்கைகள் நீதிக்குகந்ததாக அந் நாட்டில் எடுக்கப்பட வேண்டும் என்று சர்வதேசசட்டம் எதிர்பார்க்கின்றதோ அவற்றையே நிலைமாற்ற நீதி முறைகள் என்று குறிப்பிடுகின்றது சர்வதேசச்சட்டம்.

யாரோ அடக்கி ஆளப்பட்டதால் தான் அந்நாட்டில் வன்முறை வெடித்திருக்க வேண்டும் அல்லது கிளர்ச்சிகள், ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றிருக்க வேண்டும் என்ற அடிப்படையில் நிலைமாற்ற நீதிமுறைகள் இரண்டு முக்கிய எதிர்பார்ப்புக்களை முன்னிறுத்தியுள்ளன. ஒன்று – அதிகாரப்பரவலாக்கம். மற்றது – போர்க்குற்றவாளிகளைத் தண்டித்தல்.

இவற்றைச் சர்வதேசச் சமூகம் இலங்கையிலும் எதிர்பார்க்கின்றது. போர் முடிவுக்கு 2009 இல் வந்திருப்பினும் இனப்பிரச்சினை அதனால் தீர்க்கப்படவில்லை. அதனால் தான் அதிகாரப் பரவலாக்கம் தேவையுடையதாகின்றது. தற்போதும் 13ஆவது திருத்தச்சட்டம் அதிகாரப் பரவலாக்கத்தை ஏற்படுத்தியேயுள்ளது. ஆனால் அது பெரும்பான்மையினரின் பெருந் தயவை முன்வைத்தேயாக்கப்பட்டுள்ளது. அதனால் தான் 1992இன் 58ஆவது இலக்கச் சட்டமான மாவட்ட செயலாளர்கள் பற்றிய அதிகாரமாற்றச் சட்டத்தை இயற்றக் கூடியதாக இருந்தது. ஒற்றையாட்சி எனும் போது முன்னர் கொடுத்த அதிகாரங்களைப் பறித்து இவ்வாறான சட்டங்களைக் கொண்டுவரலாம். காரணம் ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரம் பெரும்பான்மையினரின் கைவசமே தொடர்ந்திருக்கும். மாகாண சபைகளின் அதிகாரத்தின் கீழிருந்த மாவட்டச் செயலர்கள் திடீரென்று இந்தச் சட்டம் இயற்றப்பட்டதும் மத்திக்குரியவர்கள் ஆகிவிட்டார்கள். இதனால் இன்று வடமாகாணத்தில் இரட்டை நிர்வாகம் நடைபெற்றுவருகின்றது. ஒன்று – மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண உறுப்பினர்களின் நிர்வாகம். மற்றையது – மத்திய அரசாங்கத்தின் முகவர்களின் நிர்வாகம். இங்கு இரு முகவர்கள் சேர்ந்தும் சேராமலும் அவரவர்கள் நிர்வாகத்தை நடாத்தி வருகின்றார்கள். ஆளுநரும் மத்தியின் முகவர். அரசாங்க அதிபரும் அவர்களின் முகவரே.

அதிகாரப் பரவலாக்கம் என்ற போது நாம் எதிர்பார்த்தது நம்மை நாமே ஆண்டுவருவதையே. ஆனால் ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப்பரவலாக்கம் என்ற போர்வையில் எமக்குக் கிடைத்தது வேண்டிய போது மத்தியின் ஊடுருவல்களே. இவ்வாறு ஊடுருவல்கள் தொடர்ந்து இருந்தால் மீண்டும் மீண்டும் பாதிக்கப்படப்போகின்றவர்கள் போருக்கு முன்னர் பாதிக்கப்பட்ட அதே மக்களே. இதனால் தான் ஒற்றையாட்சியைக் களைந்து, சமஷ்டி ஆட்சியை நிலைநிறுத்த வேண்டும் என்று கேட்டு வருகின்றோம். இடைக்கால வரைவுகள் ஒற்றையாட்சியையே மையமாகக் கொண்டு வரையப்பட்டமையால் தான் சர்வதேச நாடுகள் போதிய அதிகாரப்பகிர்வு வழங்கப்பட வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக உள்ளன.

சர்வதேசச் சட்டம் எதிர்பார்ப்பதைத்தான் ஐக்கிய நாடுகள் கூறியுள்ளன. ஆர்ஜென்டீனா சர்வாதிகாரத்தில் இருந்து வெளிவந்த போது – யூகோஸ்லாவியா, றுவண்டா மற்றும் கம்போடியா போன்றநாடுகளின்உள்நாட்டுப் போர்களில் இருந்து அவை விடுபட்ட போது – நிலைமாற்ற நீதிமுறைகள் என்ற அடிப்படையில் ஐக்கிய நாடுகள் தடைகளை விதித்தன. உலகக் குற்றவியல் மன்றத்தை உருவாக்குவதில் ஐக்கிய நாடுகள் கரிசனை காட்டின. ஆகவே சர்வதேசச் சட்டம் நிலைமைக்கேற்றவாறு, சூழலுக்கேற்றவாறு மாறுதல் அடைந்து வந்துள்ளது.

எனவே தான் சர்வதேசச் சட்டத்தின் கீழ் ஐக்கிய நாடுகள் நிலைமாற்றநீதிமுறைகள் என்று எதிர்பார்க்கும் அதிகாரப் பரவலும் போர்க்குற்ற விசாரணையும் எமக்கு முக்கியமாகியுள்ளன. இரண்டையும் தட்டிக் கழிக்கவே இலங்கை அரசாங்கம் முற்பட்டுள்ளது. அதிகாரப் பரவலில் நாம் எதிர்பார்க்கும் சுதந்திரம் எமக்கு மறுக்கப்படவிருக்கின்றது. மத்தியின் மையத்தினுள் மாகாணத்தைத் தொடர்ந்து வைத்திருக்கவே அரசாங்கம் மும்முரம் காட்டுகின்றது. ஆனால் எம்முள் சிலரோ *'அதற்கென்ன நாங்கள் கொழும்பில்த்தானே வசிக்கின்றோம், மத்திய அரசாங்கம் இங்குதானே இருக்கின்றது, நாம் இங்கு சுதந்திரமாக எப்படியும் வலம் வரலாம், ஆனால் மக்களுக்குச் சுதந்திரம் கொடுத்தால் எமது சுதந்திரம் பறிபோய் விடும், எனவே அரசாங்கம் சாட்டையைத் தன் கைவசம் வைத்திருப்பதை நாம் வரவேற்கின்றோம்'* என்ற பாணியில் நடந்து வருகின்றார்கள். அவர்களின் நடவடிக்கை காலாகாலத்தில் வடகிழக்குத் தமிழ் பேசும் மக்களின் சுதந்திரத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிடும் என்பதை அவர்கள் உணர்கின்றார்கள் இல்லை.

ஒற்றையாட்சியால் எமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி இடங்கள் பறிபோகப் போகின்றன, படைகள் தொடர்ந்து எம் மாகாணங்களில் நிலைநிற்கப் போகின்றன, எம் காணிகளின் வருமானங்கள் அவர்கள் கைவசம் செல்லவிருக்கின்றன, மகாவலி சட்டத்தின் கீழ் மேலும் மேலும் வெளியிலிருந்து மக்களை எமது மாகாணத்தினுள் கொண்டுவந்து குடியேற்ற இருக்கின்றார்கள். சுற்றுலாவை தமக்குச் சாதகமாக வளர்த்துக் கொள்ளவிருக்கின்றார்கள். எம் மக்களின் தொகைக் குறைவினால் திணைக்களங்களில் தென்னவரை நிலைநிறுத்தி வருகின்றார்கள். இந்த நிலை தொடரும். முன்னேற்றம் என்ற போர்வையில் எமது காணிகளைச் சுவீகரிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள். இன்னும் பலதையுங் கூறலாம்.

சமஷ்டி அரசியலின் கீழ் சுயாட்சிச் சுதந்திரம் அதிகாரப் பரவலாக்கல் மூலம் எமக்குக் கிடைத்தால் இவற்றைத் தடுத்து நிறுத்தலாம். ஆனால் ஒற்றையாட்சியின் கீழ் அவை தடுக்கப்பட முடியாது.

ஐக்கிய நாடுகள் முன், தாமே முன்வந்து செய்வதாக ஏற்றுக் கொண்டவற்றை இன்று செய்யப் பின் நிற்கின்றது எம் நாட்டின் அரசாங்கம்.

### போர்க் குற்றங்கள்

அடுத்து போர்க்குற்ற விசாரணைகளையும் நிலைமாற்ற நீதி முறைமைகள் வலியுறுத்துகின்றன. அதைத்தட்டிக்கழிக்கப் பார்க்கின்றது எமது அரசாங்கம்.

போரை அநியாயமான முறையில் வேண்டுமென்றே நடத்துவது போர்க்குற்றம். அடுத்து மனித குலத்திற்கெதிரான செயல்களில் ஈடுபடுவது போர்க் குற்றம். மூன்றாவது வேண்டுமென்றே இன அழிப்பில் ஈடுபடுவது போர்க்குற்றம். மூன்றிலும் எமது அரச படைகள் ஈடுபட்டிருந்தன. அக்குற்றவாளிகளை இனங்காண எமது மத்திய அரசாங்கம் பின்நிற்கின்றது.

இனப்படுகொலை பற்றிய விளக்கமும் அண்மைக் காலங்களில் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. பர்மாவில் றோஹின்தியா கொலைகள், ஈராக்கில் யாஷிடியரின் வன்புணர்வு நிகழ்ச்சிகள் இனப்படுகொலையின் அம்சமே என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இன்றைய பேச்சுக்களால் நாம் முக்கியமான இரு விடயங்களைப்புரிந்துள்ளோம். சர்வதேசச் சட்டம் விரிவடைந்துள்ளதால்எமது அல்லல்களும் அழிவுகளும் அதனுள் அடங்குவன என்ற முறையில் சர்வதேசச் சட்டத்தை ஒரு கேடயமாக ஏந்தி மத்திய அரசுடன் மோத முடியும் என்பது. அடுத்து இல்லாததை இருப்பதாகக் கூறி இனிவருங் காலத்தில் இருப்பதையும் இல்லாததாக்க நாம் உடன்படக் கூடாது என்பது. ஆகவே சர்வதேசச் சட்டம் எதிர்பார்க்கும் நிலைமாற்ற நீதி முறைமைகளின் கீழ் முறையான அதிகாரப்பரவலாக்கத்தை முயன்று பெற நீங்கள் அனைவரும் முன்வர வேண்டும்.

### காவாலிகளா? காவல் மன்னர்களா?

நிலைமாற்ற நீதிமுறைமைகளின் கீழ் குற்ற விசாரணைகளாவன சர்வதேச நீதிபதிகளையும் உள்ளடக்கிக் குற்றவாளிகளை அடையாளங்காண வேண்டும். நாங்கள் இராணுவத்தை ஒட்டுமொத்தமாகக் குறை கூறவில்லை. அதில் கடமையாற்றிய காவாலிகள் சிலரை அடையாளப்படுத்த வேண்டும் என்றே கேட்கின்றோம். அந்தக் காவாலிகளை 'வீரதீர சூரர்கள்', 'சிங்கள மக்களின் காவல் மன்னர்கள்' என்ற முறையில் மத்திய அரசாங்கத்தில் உள்ளோர் பலர் காப்பாற்றவிழைந்துள்ளார்கள். எமது நெருக்குதல்கள் காவாலிகளைக் கடைத்தெருவுக்கு இழுத்து வர வேண்டும் என்று கருதுகின்றோம். இவற்றைச் செய்ய நாம் மக்கள் இயக்கமாக ஒருங்கிணைந்து முன்னேற வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். எமது பார்வை சரியென்று கருதும் யாவரும் எம்முடைய மக்கள் இயக்கத்துடன் இணைந்து அரசாங்கத்திற்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நெருக்குதல்களை ஏற்படுத்த முன்வர வேண்டும். – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





BCAS யாழ். வளாகத்தின் வருடாந்ததைப்பொங்கள் விழா நேற்று செவ்வாய்க்கிழமை BCAS யாழ். வளாகத்தில் அதன் முகாமையாளர் திரு. எஸ்.றஸாத் அஹமட் தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் அனைத்துப் பாடநெறிக்களுக்குமான இணைப்பாளர்கள், விரிவுரையாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் அனைத்து மாணவர்களும் கலந்துகொண்டனர்.




யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மைதானம், ஆடுகளம் என்பவற்றை அவசரமாகச் சீர்செய்ய வேண்டியிருப்பதாக புதிய அதிபர் சதா நிமலன் பழைய மாணவர் சங்கத்திடம் விடுத்த கோரிக்கையை அடுத்து, 'ஜொலிஸ்ரார்' விளையாட்டுக் கழகத்தினர் தாமாக அப் பணியைப் பொறுப்பேற்று உடனடியாக மைதானத்தைச் சீராக்கும் வேலையை ஆரம்பித்துள்ளனர். பழைய மாணவர்களான தி.கோஷிகன், உமாகரன், கல்லூரி விளையாட்டுப் பொறுப்பாசிரியர் க.வாசகன் ஆகியோரின் மேற்பார்வையில் சீராக்கும் பணி தற்போது நடைபெற்று வருகின்றமையைப் படங்களில் காணலாம்.

## மரண அறிவித்தல்



### பசுபதி பாலரஞ்சன்

கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பசுபதி பாலரஞ்சன் 15.01.2018 திங்கட்கிழமை இறைபதம் எய்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பசுபதி (ஓய்வுபெற்ற நிர்வாக அதிகாரி, யாழ். கல்வித்திணைக்களம்) மற்றும் வில்வராணி தம்பதிகளின் புதல்வனும் புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சண்முகநாதன் (ஓய்வுபெற்ற அதிபர்) மற்றும் இந்திராணி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) தம்பதிகளின் மருமகனும் ஜெயந்தியின் அன்புக் கணவரும் சதுர்சனின் பாசமிகு தந்தையும் பாலகுமரன் (மோகன் மாஸ்டர்), பாலமுரளிதரன் (ஆசிரியர், ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயம்), பாலமுகுந்தன் (ஆசிரியர், காரைநகர் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பாலினி (ஆசிரியர், வசாவிளான் மத்திய கல்லூரி), காலஞ்சென்ற காயத்திரி (முன்னாள் ஆசிரியர் கொக்குவில் இந்துக் கல்லூரி), சசிகலா (ஆசிரியர், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), சதீஸ்குமார் (U.K), சுரேஸ் குமார் (ஜேர்மனி), சுகந்தி, றமேஸ்குமார் (பிரான்ஸ்), டினேஸ்குமார் (U.K) ஆகியோரின் மைத்துனரும் ஆதிரையன், ஆரூரன், ஆரணன் ஆகியோரின் சிறிய தந்தையும் விவேகரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

43/4, கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 386 7458







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.01.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.